JANAVINODINI.

ஜநவிநோதிநி.

இல. 1, 2.] {ஜனுவரிமீ பெப்ருவரிமீ} 1881. [புஸ்த. XII.

CONTENTS.

The Ed[illegible]'s Note iii
Australian Animals 1
An Orange-[illegible]an, or the Honest Boy and the Thief 2
Bending a Bow 7
The Model Wife 14
Lecture on the M[illegible]as Harbour Works 23
The Sneak 33
Gold and Gold Mines 37
Riddles 42
The Child's Corner 43
News .... [illegible]

அட்டவணை.

பத்திராதிபர் அறிக்கை iv
ஆஸ்திரேலியாதேசத்து மிருகங்கள். 1
கிச்சிலிப்பழக்காரன் அல்லது மெய்யனும் கள்வனும் 2
வில்வளைத்தல் 7
நன்மனை[illegible]யைப்பற்றிய கதை. 14
சென்னைக் கப்பல்[illegible]க்கலஸ்தானத்தைப்பற்றிய [illegible]
கபடவேஷதாரி .... [illegible]
பொன்னும் பொன்கனிகளும் 37
விடுகதைகள் 42
சிறுவர்க்கான கதை 43
சமாசாரம் 48

MADRAS:

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

TWELFTH YEAR OF PUBLICATION.

JANAVINODINI.

A monthly Illustrated Magazine of Instruction and Amusement

IN TAMIL.

Annual Subscription before June 1st	RS.	1 8 0
after ,,	....	2 0 0
Postage (per annum)		0 6 0

[*New Subscribers can join at any time at the advance rate, and receive all the numbers for the year.*]

We issue with this number the usual title page and contents of the Volume for 1880. We also commend our editorial note to the attention of the public.

All the yearly volumes of Janavinodini from the commencement (1870), elegantly bound in cloth and gilt letters, are at present on sale.

A TELUGU MAGAZINE.

The Madras School Book and Vernacular Literature Society also publishes a Telugu Version of Janavinodini, each number containing, for the present, 16 pages of interesting matter.

Price per copy $1\frac{1}{2}$ Annas; or Annual Subscription	RS.	1 0 0
Postage (per annum)............		0 6 0

112874

☞ All Communications and Money orders should be addressed to the *Secretary to the School Book and Vernacular Literature Society, Old College, Madras.*

THE EDITOR'S NOTE.

Another Volume completed, and another landmark reached in the history of *Janavinodini*—another step to make in the story of its future so as to win for it new friends. The aims and objects of this Magazine are now sufficiently known to Families and Schools in the Tamil country to render their recapitulation unnecessary. We, however, desire to express our grateful acknowledgments to all who, in the eleven years that have passed since Janavinodini was started by the School Book and Vernacular Literature Society, have helped to make this Magazine a source of instruction and recreation and a medium of wholesome reading for native homes, and trust that, in the present year, we shall receive more and more aid of the same kind. The encouraging letters we receive prove that the interest in the contents of this Magazine grows from year to year, though subscriptions are not always paid as regularly as could be wished. With greater punctuality in payment and some additional efforts on the part of our present readers to promote a further circulation of this Magazine, we anticipate that it will not only keep its ground in these progressive times, but also become a permanently self-supporting journal, instead of its being an expense to the Society, on whose behalf we conduct this Magazine with such strength and ability as we can command, counting our time well spent if only our efforts to please are appreciated.

பத்திராதிபர் அறிக்கை.

ஜநவிநோதிநியின் மற்றொரு வருஷத்துப் புத்தகம் முடிவுபெற்றது. இப்பொழுது அதன் விருத்திக்கு அறிகுறியாய்ப் புதுவருஷத்துப் புத்தகம் துவக்குகிற சமயமாதலால், இத்தருணத்தில் இந்த ஜநவிநோதிநிக்குப் பின்னும் பல புதிய நேசர்களைத் தேடி இப்பத்திரிகையை இன்னும் சற்றுத் தலையெடுக்கச்செய்வோம். இப்பத்திரிகையின் நோக்கமும் கருத்தும் இவையென்பது இத்தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களிலும் பாடசாலைகளிலும் பூரணமாய்த் தெரிந்திருக்குமாதலால், அவற்றை மறுத்தும் எடுத்துரைப்பது அவசியமன்று. ஆயினும், சென்னைச் சுபாஷைப் புத்தகச்சங்கத்தார் இந்த ஜநவிநோதிநியைப் பிரசுரஞ்செய்யத் துவக்கி நடத்திவருகிற பதினொரு வருஷகாலமாக, இப்பத்திரிகை சுதேசிகள் தங்கள் வீடுகளில் விநோதமாகப் படிக்கத்தக்கதாயும் நீதிபோதகமான இனிய புத்தகமாயும் அமையும்படி, இதற்கு உதவிசெய்துவந்தவர் அனைவரிடத்திலும் நமது நன்றியறிதலை வெளியிடவிரும்புகிறோம்; அன்றியும் இவ்விஷயத்தில் அவ்விதமான உதவிகள் மேலுமேலும் அதிகமாய்க் கிடைக்குமென்றும் நம்புகிறோம்.

இப்பத்திரிகையைப் படிப்பவர்க்கு இதிலுள்ளவிஷயங்களில் விருப்பம்மட்டும் வருஷத்துக்கு வருஷம் அதிகமாகி வருகின்றதென, அங்கங்கிருந்து நமக்கு உபபலமாய் எழுதிவருகின்ற கடிதங்களால் தெரியவருகின்றதாயினும், சில கையொப்பங்கள்மாத்திரம் கிரமமாய்க் கொடுக்கப்படவில்லை. இப்பொழுது இருப்பதுபோலன்றிக் கையொப்பங்களையும் கிரமமாகக் கொடுத்து இப்பத்திரிகையைப் படிப்பவர்கள், தந்தமக்கு அடுத்த விடங்களில் இது இன்னும் விசேஷமாகப் பரவும்படி சற்றுப் பிரயாசையும் ஏற்றுக்கொள்வார்களானால், யாவும் செழித்தோங்குகிற இக்காலத்தில் இப்பத்திரிகை பின்வாங்காமல் ஊர்ச்சிதப்படுமென்பதுமாத்திரமேயல்ல; என்றைக்கும் பராபேக்ஷையில்லாமல் தன்காரியத்தைத் தானே நடத்திக்கொள்ள வல்லதாகும். அதனால் இப்பத்திரிகைக்குப் போஷகரான சங்கத்தார்க்கு இப்போது இருப்பதுபோல ஒரு செலவாகி வருத்தங்கொடாது. மேலும், அந்தச் சங்கத்தார்க்காக நமது சக்திக்கு இயன்றவரையில் பாடுபட்டு இப்பத்திரிகையை நடத்திப் பிறர்க்குக் களிப்புண்டாக்க நாம் படுகிற பிரயாசைமட்டும் நன்குமதிக்கப்படுமானால், இதன்விஷயத்தில் நாம் கழிக்கிற காலம் நல்விஷயத்தில் கழிந்ததென்றே நினைக்கலாகும்.

ஜநவிநோதிநி.

இல. 1, 2.] {ஜனுவரிமீ பெப்ருவரிமீ} 1881. [புஸ்த. XII.

ஆஸ்திரேலியாதேசத்து மிருகங்கள்.

ஆஸ்திரேலியாதேசத்து மிருகங்கள் மிகவும் அற்புதமானவை. அவை அத்தேசந்தவிர மற்றெங்கும் காணக்கிடைக்கா. இது மாத்திரமேயன்று; நமது தேசங்களில் சாதாரணமாயிருக்கின்ற மிருகங்கள் அத்தேசத்தில் அருமை; ஆஸ்திரேலியாவில் குரங்குகளேயில்லை; ஆடுமாடுமுதலிய அசைபோடும் மிருகங்களும், யானை பன்றிவகையைச் சேர்ந்தவைகளும் ஒன்றுமில்லை. மாமிசம் புசிக்கின்ற பலவகை மிருகங்களுக்கும் பதிலாய் நமது தேசத்து நாயைப்போன்ற டிஞ்சோ என்னும் ஒருவகை மிருகமும் இரண்டொரு நீர்வாழ் ஜந்துவுமேயிருக்கின்றன. வௌவால்களில் அநேகவிதமும் பலவகை விசித்திரமான கிளிகளுமுண்டு. இன்னும் அத்தேசத்திற்கே உரியனவாய்ச் சில மிருகங்கள் இருக்கின்றன. அவற்றுள் காங்கரு என்பது ஒன்று. மற்றொரு மிருகம் வாத்து மூக்குபோன்ற மூக்கு உடையதாயிருக்கின்றது; அதை வாத்து மூக்கு மிருகமென வழங்குகிறார்கள். இவ்வதிசயமான மிருகத்தின் வடிவமே பக்கத்துப்படத்தில் விளங்குகின்றது.

இந்த மிருகம் ஆஸ்திரேலியாதேசம் ஒன்றிலேதான் காணப்படுகின்றது. அதன் உடல் மிருகங்களின் உடல்போன்றது; மூக்கு பறவைகளின் அலகுபோன்றது; பாதம் வாத்துகளின் பாதம் போலத் தோலடர்ந்தது. வாலுங் கூடச்சேர்ந்து அதன் உடல் இரண்டடி நீளமிருக்கும். அதன் தேகம் முழுதும் பளபளப்பான சாம்பல்நிறமுள்ள மயிர்கள் அடர்ந்திருக்கின்றன. இது ஒரு நாற்கால் ஜந்துவேயாயினும், சாதாரணமான நமது தேசத்து நாற்கால் ஜந்துக்களுக்கிருப்பதுபோல நீண்ட மூஞ்சி, வாய், பல் இவையொன்றும் இதற்கில்லை; வாத்துகளின் அலகுபோன்ற அலகுள்ளதாயிருக்கின்றது. இதன் பாதங்களின் தோல் மிகவும் அகன்று, முன்னங்கால்களில் அங்குள்ள நீண்ட நகங்களுக்கும் வெளியே படர்ந்திருக்

கின்றது; பின்னங்கால்களில் நகங்களின் அடிப்புறம்வளைவாயிருக்கின்றது. முன்னங்கால்களைக்கொண்டு இந்த மிருகம் தண்ணீரில் நீந்தவும் நீந்துகின்றது; பள்ளங்களும் தோண்டுகின்றது. அதற்காகவே அதன் பாதங்களில் வலிவாய நீண்டநகங்கள் இருக்கின்றன.

வாத்துமூக்குமிருகம் நீரெலிபோல் ஆற்றங்கரைகளில் வளை தோண்டிக்கொண்டு அங்கே வசிக்கின்றது; இதற்கு நீர்ப்பூச்சிகளே ஆகாரம். அந்த வளைகளுக்குப் போகத் தண்ணீர்க்குள்ளேயே வழியிருக்கும். அந்த வழி போகப்போகக் கொஞ்சம்கொஞ்சமாய் உயர்ந்து நீர்மட்டத்துக்குமேலே போய், அங்கே உலர்ந்த புல் பூண்டுகளால் கூடு ஒன்று கட்டப்பட்டிருக்கும். இந்த மிருகத்தின் குட்டிகள் முட்டையினின்றுமே உண்டாகின்றனவென்றும், அவை தாயின் வயிற்றுக்குள்ளேயே குஞ்சுபொரிக்கின்றன. பின்பு அந்தக் குஞ்சுகள் முலைப்பால்குடித்து வளர்கின்றன. நடுப்பகலைவிடக் காலைமாலை வெளியே வாத்துமூக்கு மிருகங்களுக்கு அதிக சந்தோஷமானகாலம். இந்த மிருகங்கள் படுக்கும்போது பந்துபோலச் சுருட்டிக்கொண்டு படுக்கும். ஆஸ்திரேலியாதேசத்தில் மிருகங்கள்போலவே மரஞ்செடிகளும் அத்தேசத்திற்கே உரியனவாய்ப் புதுமைபுதுமையாயிருக்கின்றன.

கிச்சிலிப்பழக்காரன் அல்லது மெய்யனும் கள்வனும்.

பொய்யாமொழி பொய்மொழி என்பவர் ஒருசாலை மாணாக்கர். பொய்யாமொழி என்பவன் தனதல்லாதனவற்றைக் கையாலேகூடத் தொடுகிறதில்லை; அவன் நல்லோனாதலால் இது அவன் வழக்கம். பொய்மொழியோவெனின், எடுக்கிறதெல்லாம் பிறர் பொருளே; அவன் கள்வனாதலால் இப்படிச் செய்வது அவனுக்கு இயற்கை. பொய்மொழியின் இளமைதொட்டே அவனுடைய தாய்தந்தையர்கள் அவன் பிறருடைமைகளைக் கண்டு ஆசைப்படுந்தோறும் அப்படிச் செய்வது கூடாதென்று அவனைக் கண்டித்துத் தண்டித்து நன்னெறி முறை பிறழாதிருக்கும்படி பாதுகாத்துவந்தார்கள். பொய்மொழி ஊரார்பண்டங்களைக்கண்டு ஆசைப்பட்டு அவற்றை எடுத்துக்கொண்டு வந்தபொழுதெல்லாம் அவனுடைய தாய்தந்தையர்கள் அதற்காக அவனைக் கண்டியாமலிருந்துவிட்டதனால், அவன் வரவரக் கள்வனானான். அப்படியிருக்க வேனிற்காலத்தில் ஒருநாள் அதிகாலையில் பொய்யாமொழி வீதிவழியாகப் போகும்போது ஒரு பொதிமாட்டுக்காரன் தன் மாட்டின்மேல் கிச்சிலிப்

பழத்தை ஏற்றிக்கொண்டு போவதைக்கண்டான். அவன் அந்த வழியோரத்திலிருந்த ஒரு சத்திரத்தின் வாசலுக்கெதிரே பொதியோடு மாட்டை நிறுத்திவிட்டு, அந்தச் சத்திரக்காரனைக் கண்டு, ஐயா நான் மூட்டையை இங்கே இறக்கவில்லை; போஜனஞ்செய்துவிட்டுப் போமளவுந்தான் இங்கே இருப்பேன்; அவ்வளவு காலமட்டும் இதை யாரிடத்திலாவது சற்றே கொடுத்துவைத்திருக்க வேண்டும், மாட்டிற்கும் கொஞ்சம் புல்விடவேண்டும் என்று கேட்டான். சத்திரக்காரன் அதற்காக ஆளைத்தேடிப்பார்க்க ஒருவனும் அகப்படாததினால், அந்த வழியாகச் சென்றுகொண்டிருந்த பொய்யாமொழி எனனும் சிறுவனைக் கூவி அழைத்து, அந்த மாட்டைச் சற்றே பிடித்துக்கொண்டிருக்கும்படி சொன்னான். அப்பொழுது அந்த மாட்டுக்காரன் அச்சிறுவனைப் பார்த்துவிட்டு, ஐயா இச்சிறுபையலை நம்பிப் பழங்களை ஒப்புவித்துவிட்டுப்போவது சரியல்லவே என்று சொல்ல, அதற்குச் சத்திரக்காரன், ஐயா நான் இவனைக் குழந்தைப்பருவமுதற்கொண்டே அறிவேன்; இவன் பொய்சொன்னானென்றாவது, திருடினானென்றாவது இன்றளவுங் கேட்டதில்லை; இவன் நல்லோனென்று இவ்வூர்முழுதும் அறியும்; இந்தக் கிச்சிலிப்பழங்கள் உம்மிடமிருந்தால் எப்படியோ அப்படியே இவனிடத்திலும் பத்திரமாயிருக்கும் என்றான். அதுகேட்டு அந்த வியாபாரி அந்தச் சிறுவனைநோக்கி, சிறுவனே, நான் இந்தச் சோற்றுக்கடைக்குப்போய் சாப்பிட்டுவருமளவும் நீ என் பொதியைப் பத்திரமாய்க் காத்திருப்பாயேயாயின் உனக்குச் சிறந்த கிச்சிலிப்பழமொன்று தருவேன் என, அச்சிறுவன், நல்லது அப்படியே ஆகட்டுமையா என்று சொல்லக்கேட்டு, அவன் தன் மாட்டின் தலைக்கயிற்றை அந்தச் சிறுவனிடங்கொடுத்துவிட்டுத் தான் காலைப்போஜனஞ் செய்துவிட்டுவரும்படியாகச் சத்திரத்திற்குட்சென்றான். பொய்யாமொழி அவ்வெருதையும் அதன்மேல் ஏற்றியிருந்த கிச்சிலிப்பழப் பொதியையும் காத்துக்கொண்டிருக்கையில், ஐந்துநிமிஷத்திற்குள்ளெல்லாம் தனது பள்ளிக்கூடத் தோழர்களில் ஒருவன் சிறிதுதூரத்தில் வரக்கண்டான். அவன் சமீபத்திலே வந்தபின்பு பார்க்கையில் தன்னுடைய தோழனாகிய பொய்மொழியெனத் தெரியவந்தது. பொய்மொழி கிட்டிவந்து அவனைக் கண்டதும், அப்பா தோழா பொய்யாமொழி! நான் இன்றுகாலையில் உன்னைக் கண்டது சுகிருதமே; நீ இங்கே என்னசெய்கிறாய்? இவ்வெருது யாருடையது? இதில் ஏற்றப்பட்டிருப்பது என்ன பொதி என்றான். அதுகேட்டுப் பொய்யாமொழி, இது கிச்சிலிப்பழம்; பொதிமாட்டுவர்த்தகர் ஒருவர் இவற்றை என்வசம் ஒப்புவித்துவிட்டு இந்தச் சத்திரத்துக்குள்ளே போய்க் காலைப்போஜனஞ்செய்துவருகிறேனென்று போயிருக்கிறார்; அவர் சாப்பிட்டுவிட்டு வந்ததும் எனக்கொரு கிச்சிலிப்பழம் தருவதாகச் சொன்னாராதலால்

நான் இவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்றான். அதற்கு அவன், உனக்கு அவர் முழுப்பழமொன்று தருகிறாரென்றார்? எனக்குத்தானா ஒரு பழமுமில்லை; நல்லதிருக்கட்டும், பழம் எவ்வளவுபெரிது பார்க்கலாம் என்று சொல்லிக்கொண்டே மாட்டண்டைபோய்க் கைச்சந்தியின் வாயை மெள்ளத்திறந்து, அப்பா, இக்கனிகள் எவ்வளவு சிறந்ததாயிருக்கின்றன! பழமோ காயோ பார்க்கிறேனென்று அவற்றைத் தொட்டுப்பார்க்கப்போனான். அப்பொழுது பொய்யாமொழி, சிறுவனே! கனியைத் தொடாதே; இவை பழுத்திருந்தாலென்ன, பழுத்திராவிட்டாலென்ன; நீ இவற்றை உண்ணப்போகிறதில்லையே; நீ வீணில் என்னையேன் வம்புக்கிழுக்கிறாய்; பழங்கள் உன்னுடையனவல்ல; தொடாதே தொடாதே என்றான். அதற்குப் பொய்மொழி, அடா, ஏன் தொடக்கூடாது, மெய்தானா, தொட்டாலென்ன குற்றம், நான் இவற்றை எடுத்துக்கொண்டா ஓடிப்போகிறேன் என்று சுமைக்குள்ளே கையை நுழைத்து ஒரு பழத்தை எடுத்தான். பின்பு அதை மோந்துபார்த்து, இதன் மணம் வெகு நன்றாயிருக்கிறது; பழமும் சிலாக்கியமானதுதான்; எனக்கு இதன் ருசியைப் பார்க்கவேண்டுமென்று ஆவலுண்டாகிறது; சுவையூறியும்படி இதன் மேலோடு ஒரு துளிரசத்தைமட்டும் ருசிபார்த்துவிட்டுத் தருகிறேன் என்று பழத்தை எடுத்து வாயில் வைத்துக்கொண்டான்.

இதைப் படிக்கிற சிறுவர்களே! நீங்கள் நல்லவர்களாயிருக்கவேண்டுமென்றால், இப்படி மருட்டாட்டமாய் ஏய்க்கப்படாதிருங்கள்; மனிதர் இப்படித்தான் சிறுகச் சிறுகத் தீங்கிழைக்கும்படி தூண்டிவிடப்படுகிறார்கள். பொய்மொழிக்கு அந்தக் கிச்சிலிப்பழத்தைக் கண்டதும், முதலில் அதைத் தொட்டுப்பார்க்கவேண்டுமென்றும், தொட்டபின்பு மோந்துபார்க்கவேண்டுமென்றும், மோந்ததன்மேல் அதனுடைய ருசி எப்படியிருக்கிறதென்று பார்க்கவேண்டுமென்றும் இப்படி மேலுமேலும் புத்தி சலித்ததைப் பாருங்கள்.

பெரீய்மொழி கிச்சிலிப்பழத்தை எடுப்பதைக்கண்ட பொய்யாமொழி, நீ மோந்துபார்க்கிறதாகச் சொல்லியன்றோ இப்பழத்தை எடுத்தாய்; அடா! உனக்கு வெட்கந்தானில்லையோ; வையடா பழத்தை என்றான். அதற்கு அந்தப் பையல், பொய்யாமொழி, இது உன்னுடையதல்லவே; உனக்கென்ன விசாரம், சும்மாயிரு என்றான். அதற்குப் பொய்யாமொழி, என் பழமல்லவெனினும், இவற்றைப் பத்திரமாய்க் காத்து ஒப்புவிப்பது என்னைப் பொறுத்த கடனாதலால் நீ இக்கணமே எடுத்தபழத்தை இதிற்குள்ளே போட்டுவிடவேண்டும் என்றதற்குப் பொய்மொழி, அப்படியானால் வா, ஒருகை பார்ப்போம்; நான் உன்னிலும் பலவானன்றோவென்று சொன்னான். அதுகேட்டுப் பொய்யாமொழி அச்சிறுவனைப்பார்த்து, அடா நான்

இந்த அகடவிகட சாமர்த்தியத்திற்கெல்லாம் பயந்தவனன்று; நான் சொல்வதெல்லாம் நியாயமேயென்று, அப்பழத்தைத் தனக்குள்ள முழுபலத்தோடு பிடுங்கிப் பைக்குள்ளே வைத்தான். உடனே பொய்மொழி சீற்றத்தோடுவந்து பொய்யாமொழியின் முகத்தில் பலமாய் ஓர் குத்துக்குத்த, அவன் மூர்ச்சையடைந்தான். இவ்வாறு அவனுக்குமூர்ச்சைபோய்க் கண்பொறி கலங்கிற்றென்றாலும் அவன் தனக்குள்ள நோயைப் பாராட்டாமல், தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட கிச்சிலிப்பழத்தைப் பத்திரமாய்ப் பாதுகாத்து ஒப்புவிக்கவேண்டுமென்று அம்மாட்டின் தலைக்கயிற்றை ஒரு கையாலும், கைச்சந்தியின்வாயை மற்றொருகையாலும் தன்னால் இயன்றமட்டும் ஜாக்கிரதையாய்ப் பிடித்துக்கொண்டு நின்றான். பொய்மொழி பொதிக்குள்ளே மீண்டும் கையைப்போட்டெடுப்பதற்காக என்னமுயன்றும் பலிக்கவில்லை. பின்னர் அவன், பொய்யாமொழியைத் தன் பலத்தினாலே வெல்ல வழியில்லையென்றறிந்து, மெள்ளத் தந்திரமாய் ஏமாற்றிப் பழத்தைக் கைக்கொள்ளவேண்டுமென்ற கருத்துடன், தனக்கு மூச்சடைத்துக்கொண்டு மூர்ச்சைபோனதுபோலப் பாசாங்குசெய்தான். "மோசக்காரன் பேயிற்கடை" என்றபடி, கள்ளநெஞ்சர்கள் தம்மை அறிவுடையோரென்று நினைக்கிறார்களெனினும், அவர்கள் எப்பொழுதும் அறிவீனத்தால் தீங்கிழைப்பவர்களாகிறார்கள். பொய்யாமொழி தன் பாசாங்கை மெய்யென்றெண்ணி அப்புறம் போவானாகையால், தான் மெள்ள மற்றொருப்பக்கமாய் நகர்ந்து பொதியிலிருந்து பழத்தை வாரிக்கொண்டு ஓடிப்போய்விடலாமென்பது பொய்மொழிகொண்ட கருத்து. அவன் ஒன்று நினைக்க அது விதிவசத்தால் வேறாகமுடிந்தது. அந்த மாடு உதைகாலியாதலால், அதைக் கிட்டிச்சென்று கிச்சிலிப்பழத்தை மெள்ள எடுக்கப்போகையில், அவனை நன்றாக ஓர் உதைகொடுக்கவே, அவன் அந்த உபத்திரவத்தைப் பொறுக்கமாட்டாமல் ஓவென்று கதறினான். இவனிட்ட ஓலத்தைக்கேட்டு, அந்தச் சத்திரத்துக்குள்ளே இருந்தவர்கள் அதென்னவென்று பார்ப்பதற்காக வெளியே வந்தார்கள். அந்தக் கிச்சிலிப்பழவர்த்தகனும் அவர்களோடு கூட வந்தான். பொய்மொழிக்கு அவனைக் காணவே தனக்குள்ள வலியுந்தெரியாமல் வெட்கி, எப்படியாவது அந்த இடத்தைவிட்டு எங்கேயாவது வெளியே தப்பி ஓடிப்போனாற் போதுமென்று தோற்றியது. ஆயினும் அவன் தனக்கு நேர்ந்த வலியின் உபத்திரவத்தினால் வேறெங்கும் போகத் திடனற்று அவ்விடத்திலேதானே இருக்க வேண்டியதாயிற்று. அங்கே வந்தவர்களெல்லாம் நடந்தசெய்தியைப் பொய்யாமொழியின் முகமாய்க் கேட்டார்கள். பொய்யாமொழியை அறிந்தவர்களெல்லாரும், பொய்யாமொழி சொன்னதனைத்தும் யதார்த்தமென்று நம்பினார்கள். பொய்யாமொழி மிக்க நல்லோனென்றும், பொய்மொழி பொய்சொல்பவனென்றும், கள்

வனென்றும் நாடெங்கும் அறிந்தவிஷயமே. ஆதலினால், பொய்மொழி பட்டதுன்பத்திற்காக, ஐயோவென்றிரங்குவார் அங்கு ஒருவருமில்லை. அங்கிருந்தவர்களில் ஒருவன், இவனுக்கு இந்த உதை வேண்டியதுதான் என்றும், மற்றொருவன், தனதல்லாத பொருளை எடுக்கத் துணிந்தானாகையால் இவனுக்குப் பட்ட உதை போதாதென்றும், வேறொருவன், இவனுக்கு இந்த உதையினால் நல்ல புத்திவந்து மரணதண்டனைக்குத் தப்புவானேயானால் இப்பொழுது பட்ட உதை இவன் செய்த புண்ணியத்தினால் கிடைத்ததென்று சொல்லலாகுமென்றும் பலவாறாகச் சொல்லிக்கொண்டார்கள். அங்கு நின்றவர்களுக்குள்ளெல்லாம் வாய்திறவாதிருந்து, பொய்மொழிக்குத் துணைநின்றவன் பொய்யாமொழியொருவனே; தீரமுள்ள சிறுவர்கள் எக்காலத்திலும் நற்சிந்தையுடையவர்களாயிருப்பதியல்வு. பொதிமாட்டு வியாபாரி பொய்யாமொழியை நோக்கி, இங்கே வா குழந்தாய் என் துரையே! அந்தக்கொடிய பையல் என் பழத்தை எடுக்கவொட்டாமல் அவனோடு மல்லுக்கு நின்றது நீயன்றோ! என் பழத்தைக் காக்கும்படி நீ அவனோடு போராடுகையில் அந்தப் பாவி உன் கண் ரத்தஞ் சோரும்படி குத்தினானே; அச்சண்டாளன் உன்னிலுந் திடகாத்திரன் என்று சொல்லிக்கொண்டே, அவனை அத்தனைபேருக்கும் நடுவே அழைத்துக்கொண்டு போனான். அங்கிருந்த ஆடவரும், பெண்டிரும், சிறுவர்களும், சிறுமிகளும் அவர்களைச் சூழநின்றார்கள். அங்குநின்ற சிறுவர் சிறுமிகளெல்லாம் பொய்யாமொழியைப் பார்த்தவண்ணமாயிருந்து, தாங்களும் அவனைப்போல நல்லோனென்று பெயரெடுக்க வேண்டுமென்ற ஆவலுடையவர்களானார்கள். பொய்யாமொழியை அழைத்துக்கொண்டுபோனவுடனே அந்தப் பழவர்த்தகன் அவன் மடிநிறையச் சிறந்த பழங்களைக்கட்டி, எனது நண்பனாகிய சிறுவனே! இப்பழத்தை நீ எடுத்துக்கொள்; உன்னை ஆண்டவன் ஆசீர்வதிப்பாராக; எனக்கு நிர்வாகமிருக்கிறபக்ஷத்தில், இந்தப் பொதியிலுள்ள பழமெல்லாவற்றையும் உனக்கே கொடுத்துவிடுவேன் என்றான். பின்பு அங்கிருந்தவர்களெல்லாம் ஆனந்தக்களிப்படைந்து கைகொட்டி ஆர்ப்பரித்தார்கள். இதில், சிறுவர்சிறுமிகளுக்குண்டான கொண்டாட்டம் அதிகம். அந்த ஆரவாரம் அடங்கினதும், பொய்யாமொழி அவ்வணிகனைநோக்கி, ஐயா! நீர் செய்த நன்றிக்காக உம்மை மனமுவந்து வந்தனஞ்செய்கிறேன்; ஆயினும் நீர் எனக்குக் கொடுக்கும் பழங்களையெல்லாம் நான் பெறச் சம்மதியேன்; எனக்குத் தருகிறோமென்றீரே, அந்த ஒருபழத்தைமட்டுந்தான் ஏற்றுக்கொள்ளுவேன்; மற்றவையெல்லாம் நீரே வைத்துக்கொள்ளவேண்டியதுதான்; என் கண்ணில் உதிரஞ்சோரும்படி அவன் குத்தியதைப்பற்றி நீர் கவலைப்பட்டு, அதற்காக எனக்கு ஏதோ பழம்கொடுக்க நினைப்பதுசரியன்று. நீர் ஒப்புவித்த பொருளைக் காத்து உம்மி

டம் ஒப்புவிப்பது நியாயமாய் என் கடமையேயன்றி வேறல்ல; ஆதலால், இப்பழங்களையெல்லாம் பெறேன்; ஆயினும் நான் இவற்றை உம்மிடமிருந்து பெற்றாற்போலெண்ணி வந்தனஞ்செய்கிறேனென்று சொல்லிக்கொண்டே தன் மடியிலிருந்த பழங்களையெல்லாம் பெட்டியிற் கொட்டப்போனான். அந்தக் கிச்சிலிப்பழக்காரன் அதற்கு உடன்படவில்லை. அதுகண்ட பொய்யாமொழி, ஐயா! நியாயமாக இவை என்னைச் சேரவேண்டியனவாயிருக்கிற பக்ஷத்தில், நான் என்னுடைய இஷ்டப்படி இவற்றை விநியோகஞ்செய்யலாமல்லவாவென்று மடியோடு பழங்களையெல்லாம் அங்குள்ள தன் தோழர்களின் கூட்டத்தின் நடுவிலே கொட்டி, அவர்களைப் பங்கிட்டுக்கொள்ளும்படி சொல்லிவிட்டு, அதற்காக அவர்கள் செய்யும் புகழ்ச்சியைப்பெற விரும்பாமல் அக்கும்பலுக்குள்ளிருந்து உடனே தன் வீட்டுக்கு விரைந்துசென்றான். கூடநின்ற பிள்ளைகளெல்லாரும் அவன் பின்னோடு கைகொட்டி அவனுக்கு வந்தனஞ்செய்தவண்ணமாய் அவனைப் பின்பற்றிச்சென்றார்கள். திருடனாகிய பொய்மொழியும், புண்பட்டகாலோடு நொண்டிநொண்டிக்கொண்டே அவர்கள் பின்னேபோனான். அவனைச் சிந்துவாருமில்லை; சட்டைசெய்வாருமில்லை; அவனுக்குத் தின்னக் கிச்சிலியுமில்லை; கொடுப்பாருமில்லை. யார்க்கும் நன்னடக்கையல்லவோ பெரிது? பொய்மொழி அழுதகண்ணுஞ் சிந்திய மூக்குமாய், ஐயோபாவி! ஒரு பழத்துக்கு ஆசைப்பட்டல்லவோ இக்கோலமானேன் என்று ஏக்கம்பிடித்து வீடுபோய்ச்சேர்ந்தான். ஆதலால் யாரும் தீமையை ஒருபொழுதும் செய்யத் துணியலாகாது.

"தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந்தற்று."

வில்வளைத்தல்.

ஆதியில் அம்பும் வில்லும் இப்படிப்பட்டதெனக் கண்டுபிடித்தவன் ஒருவகைக் காட்டுமனிதனேயாயினும், அவன் இன்னானெனப் பேரூர் தெரியவருமானால், அவனுடைய பேரும் புகழும் என்றும் அழியாதிருக்கும்படி அவனுடைய பதுமையொன்று அவசியம் பிரதிஷ்டைசெய்விக்கவேண்டியதாகும். ஏனெனில், உலகத்தில் நாகரீகம் விசேஷமாய் விருத்தியாவதற்கு ஏதுவான ஒரு பிரகிருதிதத்துவத்தை வெளியிட்டு அவன் மானிடர்களுக்கு மகோபகாரம் செய்தவன்.

சண்டைசெய்கையிலும் சமாதானமாயிருக்கையிலும் மன்னுயிர்களுக்கு மிகவும் உபயோகமாகும்படி பிரகிருதி தத்துவமொன்று வரவர விருத்தியாகிவந்த வரலாற்றைக் காட்சிப்பொருள்சாலையில் குறித்துவைப்பது மிக்க விநோதமாயிருக்கும். ஆதியில் அற்பமாயிருந்த அம்பும் வில்லும் வரவர விருத்தியடைந்து, மிகுந்த வலிவுள்ளதான வக்கிரதனுச்சாக யந்திரங்களில் செய்யப்பட்டு, மனிதர்களோடும் மிருகங்களோடும் போராடுவதற்கு உயர்ந்த கருவியாயிற்று. அந்தக் கருவி பின்னும் சீர்திருத்தம்பெற்றுத் துப்பாக்கி, முறுக்குக்குழல்துப்பாக்கி முதலாக மிகவும் பெரிதான 100 டன் எடையுள்ள பீரங்கிவரையில் உள்ள பல யுத்தக்கருவிகளும் மற்றும் செய்வதற்கு ஏதுவாயிற்று.

இந்த வரிசையில் முதற்கருவியான வில்லுக்கும் கடைக்கருவியான பீரங்கிக்கும் யாதொரு ஒற்றுமையும் இல்லைபோல மேற்பார்வைக்குத் தோற்றுமாயினும், ஊற்றமாய்ப்பார்த்தால் இந்தக் கடைசிக்கருவி முதற்கருவியின் மாறுபாடேயெனத் தெளிவாய்த் தோன்றும்.

வில்வளைப்பதற்குரிய தத்துவமானது யுத்தாங்கமொன்றுக்கு மாத்திரமே உபயோகப்பட்டுவருவதாயிருக்குமாயின், ஆதியில் அந்தத தத்துவத்தைக் கண்டுபிடித்தவனைத் தெய்வமாகக் கொண்டாடும்படி அவனுக்கு அத்தனை பெருமையிராது. அப்படியிராமல் அந்தத் தத்துவம் வெவ்வேறு கருவிகள் செய்வதற்கு ஏதுவாகி உலகத்துக்கு மிகவும் உபயோகமாகும்படியாயிற்று. மேற்பார்வையாய்ப் பார்க்கும்போது, அம்புபாய்வது, சங்கீதவாத்தியங்களின் நாதம் உண்டாவது, வாயுமண்டலத்தில் ஒளிபரவுவது, நீராவியந்திரம் ஓடுவது இவைமுதலியவற்றிற்கெல்லாம் சம்பந்தம் யாதொன்றுமில்லையெனத் தோன்றுமாயினும், விசாரிக்குமளவில் இவை யாவற்றிற்கும் மூலகாரணம் ஒன்றேயெனவும், ஒரே பிரகிருதி தத்துவத்தாலேயே இவை யாவும் உண்டாகின்றனவெனவும் தெளிவாகும்.

முதலில் தனுசின் செயலைப்பற்றி விசாரிப்போம். நாணைப் பிடித்திழுத்தால் வில்வளைகின்றது; அப்படியிழுத்து நாணை மறுபடி விட்டுவிட்டால், அந்த வில் தன் இயற்கை நிலைபெறும்படி வெகு வலிவாக நிமிர்கின்றது. சாதாரணமாய்ப் பார்ப்பவர்களுக்கு வில்லின் செயல் இதுதானெனத் தோன்றும். நாம் வில் என்று வழங்கு

கிற தடியானது தன் இயற்கைநிலையிலிருந்து வெகு வலியாக வளைக்கப்பட்டு, நாம் விட்டுவிட்டால், மறுபடி தன் இயற்கை நிலை பெற வெகுவலிவாக நிமிர்கிறதல்லவா? இதற்கு ஸ்திதஸ்தாபக குணம் (elasticity) என்று பெயர். இக்குணம் வில்லுக்குத் தன் சுபாவமான கோணாத ஆகாரத்தை அடையச்செய்வதால் வில்வி னிடத்திலுள்ள ஸ்திதஸ்தாபககுணத்திற்கு ஆகார ஸ்திதஸ்தாபக குணமென்று பெயர். ஒரு பொருளின் இயற்கையான நிலைமை நாம் நமது வலிவைக்கொண்டு மாற்றுவோமானால், மறுபடி அந்தப் பொருள் தன் இயற்கைநிலை அடையும்படி செய்யத்தக்ககுணம் ஸ்திதஸ்தாபககுணமென்பது இதனால் தெளிவாகின்றது.

இந்தப் பிரபஞ்சத்தில் ஸ்திதஸ்தாபககுணத்திற்குப் பல திருஷ்டாந்தங்கள் காணலாம்; யந்திரங்களிலும் அது பலவாய் உபயோகிக்கப்படுகின்றது. கடிகாயந்திரத்தினுள் இருப்புக் கம்பியொன்று சுண்டாய்ச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கின்றதல்லவா? அதின் ஒவ்வொரு சிறுபாகத்தையும் வளைக்கப்பட்ட வில்லென்று சொல்லலாம். அந்த ஒவ்வொரு பாகமும் அதிலுள்ள ஸ்திதஸ்தாபககுணத்தால் நேராக நிமிர முயல்கின்றது. இவ்விதமாய் அந்தக் கம்பியிலுள்ள ஸ்திதஸ்தாபககுணமே அந்தந்தக் கடிகாயந்திரத்தை ஏற்றபடி ஓடச்செய்கின்றது. இதே நியாயத்தைக்கொண்டுதான் வண்டி வில்லுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆயின் வண்டிவில் உபயோகப்படுகிற வகை கீழ்ச்சொல்லிய வில்லுகளைப்போலன்று. தனுசினிடத்திலுள்ள ஸ்திதஸ்தாபககுணம் அதை வளையவொட்டாமல் மறுக்கிறது; வண்டிவில்லின் ஸ்திதஸ்தாபககுணமோ அதை நேராக நிமிரவொட்டாமல் மறுக்கின்றது.



1. வண்டிவில்லின் நிலைமையக்காட்டும் வடிவம்.

இந்தப் படத்தில் காட்டியபடி வண்டிவில்லுகள் இயற்கையில் வளைந்தவண்ணம் செய்யப்பட்டிருக்கின்றன. அதன்மேல் ஏற்றிய வண்டியின் சுமை இந்த அம்புகள் சுட்டிக் காட்டுகிறபடி அதை உட்புறமாய் அழுத்தி நேராக நிமிர்க்க முயல, அதின் ஸ்திதஸ்தாபககுணம் அந்தச் சுமை அதை அழுத்தி நிமிர்க்கவொட்டாமல் தடுத்து அது தன் இயற்கைநிலையைக் காக்க முயல்கின்றது. மிகக்கடினமாய் மேற்பார்வைக்கு வணங்காத தன்மையுள்ளனவாகத் தோற்றுகிற

கண்ணாடி, தந்தம், சலவைக்கல் முதலிய பொருள்களிலும் இவ்வித மான ஸ்திதஸ்தாபககுணமுண்டு. இந்தப் பொருள்களாலாகிய உருண்டையை எடுத்துக் கடினமான தரையில் விழும்படி போடுவோமானால், அது மறுபடியும் அங்கிருந்து உயர எழும்பக்காண்போம். அவ்விதமான பந்துகள் அநேகம்முறையில் எவ்வளவு உயரத்திலிருந்து விழ்ந்தனவோ, ஏறக்குறைய அவ்வளவு உயரம் எழும்பும். இதற்குள்ள நியாயமும் வண்டிவில்லுக்குள்ள நியாயந்தானெனத் தெளிவாய்ச் சொல்லலாம். எப்படியெனில், அந்தப் பந்து பூமியில் படுகிற பாகம்



2. கடினமான பந்துகளின் ஸ்திதஸ்தாபககுணத்தைக்காட்டும் வடிவம்.

இந்த இரண்டாவது படத்தில் க த என்னும் கோடுகிழித்திருக்கிறபடி கீழேவிழ்ந்த வேகத்தால் அழுந்தித் தட்டையாய்ப்போம்.

அதன் ஸ்திதஸ்தாபககுணமானது அந்தப் பந்து மறுபடி தன் இயற்கைவடிவைப் பெறும்படி தூண்டுகிறது; அந்த பலத்தால் அது மறுபடியும் உயரக் கிளம்புகின்றது. எளிதில் வணங்கும் தன்மையுள்ள ரப்பர்முதலியவற்றால் செய்த பந்துமுதலியவை கீழேவிழும்போது அந்தப் பந்துகளின் ஒருபுறம் தட்டையாவதை நாம் நேராகவே காணலாம். கடினமான கண்ணாடிமுதலியவற்றால் செய்த பந்துகளில் நேராகக் காணக்கூடாது. அந்தப் பந்தைக் கீழே போடுவதற்குமுன்னே தரையில் ஏதாவது கொஞ்சம் மாவைத் தூவி அதன்மேல் அந்தப் பந்தைப் போடுவோமானால், அப்பொழுது அதன் அடிப்புறம் தட்டையாவதை ஊகித்தறியலாம். விழ்ந்த வேகத்தில் அது சிறிதும் வணங்காதிருக்குமாயின், தரையில் உள்ள மாவு அதனடிப்புறத்தில் ஒரு பாகத்தில்மாத்திரமல்லவோ பட்டிருக்கவேண்டும்; அப்படியன்றி அடிப்புறத்தில் சிறிதுதூரம் வட்டமாய்ப் படர்ந்திருக்கக் காண்போம். தரையிலே போட்ட பந்துகள் மறுபடி உயரக் கிளம்பும்விஷயத்தில் கண்ணாடிப்பந்து, சலவைக்கல் பந்து, ரப்பர்க்குண்டு இவைகளுக்கு உள்ள வேற்றுமையை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். ரப்பர்க்குண்டில் ஸ்திதஸ்தாபககுணம் அத்தனையாய் அதிகமில்லை. ரப்பர்க்குண்டைப்பார்க்க அநேகம் பங்கு அதிகமாய் தந்தப்பந்து உயர எழும்பும். ஆனதுபற்றியே பந்துகள் அதிகமாக உயர எழும்பவேண்டிய ஆட்டங்களில் தந்த

பந்தையே முக்கியமாய்க் கையாடுகிறார்கள். மேலும் நம்முடைய சவுக்கியங்களுக்கும் இந்த ஸ்திதஸ்தாபககுணம் அநேகமாக உபயோகப்படுகின்றது. நாம் சுகமாய்ப் படுத்து நித்திரைசெய்வதற்கு வேண்டிய மெத்தைமுதலியவெல்லாம், வில், நார், பஞ்சு, மயிர் இவற்றால் அமைக்கப்படுகின்றனவல்லவா? இவற்றிலுள்ள ஸ்திதஸ்தாபககுணத்தாலேயே மெத்தைகள் அமைகின்றன. இவ்வண்ணமே ஸ்திதஸ்தாபககுணத்திற்கு நாம் அநேகம் திருஷ்டாந்தமெடுத்துச் சொல்லலாம். ஆயினும் வில்வளைத்தலின் தத்துவம் உலகத்தில் எங்கும் பார்த்து அதிகமாய் உபயோகப்படுகின்றதென்று காட்ட இதுவே போதுமானதல்லவா?

இப்பொழுது காட்டிய வில்லின் செய்கையை இன்னும் நுட்பமாய் விசாரிக்கப் புகுந்தால், அதில் பின்னும் பல புதுமைகள் காணப்படும். இந்த 3-வது படத்தைப்பாருங்கள். இதில் க என்பது வளைக்காத வில்லின் வடிவத்தைக் குறிக்கின்றது. வில் வளையாதிருக்கையில் க என்னும் படத்தில் காட்டியபடி சிறிதும் கோணாமல் சமதூரமாயுள்ள கோடுகள், அதை வளைக்கும்போது அப்படியே சமதூரநேர்க்கோடாயிராமல், ந என்னும் படத்தில் காட்டியபடி பாலங்களின் வளைவிலுள்ள கற்களைப்போல் அதன் உட்புறத்தில் ஒன்றுக்கொன்று நெருங்கி வெளிப்புறத்தில் விரளமாகின்றன. வில்லை வளைக்கும்போது அதன் அடிப்புறத்து நார்கள் நெருங்க, மேற்புறத்து நார்கள் விரிகின்றனவென்று இதனால் தெளிவாகின்றது. மேற்பட்டையோடுகூடிய ஒரு கிளையையெடுத்து வில்லைப்போல வளைப்போமானால் அதன் அடிப்புறத்துப் பட்டைகள் நெருங்குவதும், மேற்புறத்துப்பட்டைகள் விரிவதும் நன்றாய்த் தெரியும். ஆகையால் வளைந்தவில் மறுபடி தன் இயற்கைநிலையைப் பெற நிமிரும்போது முன்நெருங்கிய உட்புறத்து நார்கள் விரிந்து மேற்புறத்து நார்கள் சுருங்கும். இவ்வண்ணம் தன் நார்கள் சுருங்கவும் விரியவும் ஒட்டாமல் அதைத் தடுக்கும்படியான திறமை தண்டங்களில் இருப்பதனாலேதான் வில்லின் செயலுக்குப் பலமுண்டாகிறது. தண்டங்களின் நார்கள் இப்படி விரிவதையும் சுருங்குவதையும் பார்க்கையில், நமது ஆராய்ச்சிக்கு இன்னும் அதிக இடமுண்டாகின்றது. சில பொருள்களின் ஸ்திதஸ்தாபககுணத்தை வில்லின் ஸ்திதஸ்தாபககுணம்போல் அத்தனை தெளிவாய்க் காட்

க

ந



3. வில்லை வளைக்கும்போது உண்டாகும் செய்கையைக்குறிக்கும் படம்.

டக்கூடாது; அப்படிப்பட்ட குணத்தைச் சுருங்கி விரிவதைக் கொண்டு கண்டறியவேண்டும். இதற்கு ரப்பரே ஏற்ற உதாரணமாகும். ரப்பரை நாம் இஷ்டப்படியெல்லாம் நீட்டி இழுக்கவும், வளைக்கவும், முறுக்கவும், திருப்பவும் கூடுமாயினும் அதன் வடிவத்தைமட்டும் மாற்றக்கூடாது. பாகுக்கட்டிகளும் இப்படியே. இவற்றை நாம் வேண்டியபடியெல்லாம் சுலபமாய் வளைக்கவும், நீட்டவும் கூடுமாயினும், பின்னும் குறுகும்படி நெருக்கமாத்திரம் கூடவேகூடாது.

உலோகங்கள் நீட்டி இழுத்தால் மறுபடி சுருங்கிக்கொள்ளத்தக்கவையாயிருப்பதால் அதனாலேயே அவற்றின் ஸ்திதஸ்தாபககுணம் நன்றாய்த் தெரியவருகின்றது. எப்படியெனில், வெவ்வேறு லோகக்கம்பிகளின் ஒவ்வொரு நுனியை உயரக்கட்டித் தொங்கவிட்டு மற்றொரு நுனியில் பெரிய பளுவொன்றைத் தொங்கவிடுவோமானால், அததற்குத் தக்கபடி வெவ்வேறளவாக அந்தக் கம்பிகள் நீளும். அந்தச் சுமை அதிக பாரமாயிராவிட்டால் அதை எடுத்தவுடனே அந்தக் கம்பிகள் திரும்பவும் தம் இயற்கையான அளவிற்குப் போய்விடும். இவ்விதமாகச் சோதனைசெய்துபார்த்ததில் எல்லா உலோகங்களிலும் ஒருவாறு ஸ்திதஸ்தாபககுணம் இருக்கிறதெனத் தெளிவாயிற்று. இரும்பையும் எஃகையும் எவ்வளவுநீளம் இழுத்துவிட்டாலும் அவை உடனே தம் இயற்கையான அளவிற்குச் சுருங்கிப்போம். ஈயத்தில் இந்தக் குணம் வெகு சொற்பமாயிருக்கின்றது. கம்பிகளிலும் கயிறுகளிலும் வேறொருவகையாயும் ஸ்திதஸ்தாபககுணத்தைக் கண்டறியலாம். அவற்றின் ஒருமுனையை உறுதியாகப் பிடித்துக்கொண்டு மற்றொரு முனையை நன்றாக முறுக்கி மறுபடி விட்டுவிடுவோமானால், அவை அம்முறுக்குப் பிரிந்து நேராகநிற்கும். இதற்குச் சொரூப ஸ்திதஸ்தாபககுணமென்று பெயர். கம்பியையாகட்டும், கயிற்றையாகட்டும் இரண்டு முனையையும் இழுத்துக்கட்டி அதன் மத்தியில் பிடித்திழுப்போமானால், 4-வது படத்தில் காட்டியபடி அதை நாம் இழுத்து நீட்டுகிறோமென்பது தெளிவாய்த் தெரியும். அப்படி நாம் இழுத்துவிட்ட உடனே அதன் ஸ்திதஸ்தாபககுணத்தின் பெருமையால் அது மறுபடி சுருங்கித் தன் இயற்கைநிலையிலேயே நிற்கும்.

4. கம்பியை மத்தியில் பிடித்திழுத்து நீட்டுவதைக்காட்டும் படம்.

மேலும், அவ்விதமான கம்பி, கயிறு, வில்லு இவைகளை நாம் இழுத்துவிடும்போது அவை ஒன்றும் உடனே தன் இயற்கைநிலை அடைவதில்லை; சிறிதுநேரம் அதேநிலையில் கடிகாரயந்திரப்பெண்டுலம் ஆடுவதுபோல முன்னும்பின்னும் ஆடிக்கொண்டேநின்று பின்பு தன் நிலைபெறுகின்றது. தந்திகளுள்ள வாத்தியக்கருவிகளில் கம்பி

கள் இவ்விதமாக ஆடியே நாதம் உண்டாவதனால், எந்த நியாயத்தைக்கொண்டு நாணினின்றும் அம்பு எழும்பிப் பாய்கின்றதோ, அதே நியாயத்தினாலேயே வீணைமுதலிய வாத்தியங்களுக்கு நாதம் உண்டாகின்றதெனத் தெளிவாகின்றது.

மேற்சொன்ன எல்லாவற்றிலும் ஸ்திதஸ்தாபககுணத்திற்கு ஓர் அளவுண்டு. அவ்வளவுகடந்தால் ஸ்திதஸ்தாபககுணம் காரியகாரியாகமாட்டாது. அவ்வளவைக் கடந்து நாம் நடப்போமானால், அந்தப் பொருள் ஒடிந்தாவதுபோம், அல்லது அதன் வடிவம் அப்படியே நிலையாக மாறுபட்டாவதுபோம். எப்படியெனில், வில்லை நாம் அளவுகடந்து வளைப்போமானால் அது ஒடிந்துபோம்; ஒரு கம்பியை அளவுகடந்து நீட்டுவோமானால், அது அப்படியே நிலையாக நீண்டுபோம்; அதை அதிகமாக முறுக்கினாலும் அப்படியே கோணலாய் நின்றுபோம். ஆகலால் இவ்வளவின் பரிமாணத்தை நன்றாகக் கற்றறிந்துகொள்வது, உலோகம்முதலிய பொருள்களை யந்திரங்களுக்கும், பாலம்முதலிய கட்டடங்கள் கட்டுவதற்கும் உபயோகிப்பதற்கு மிகவும் அனுகூலமாகும். ஏனெனில் அவ்வளவைக் கடந்து நடத்துகிற பக்ஷத்தில் அந்தப் பொருள்கள் நிலையாகவே உருவம் கோணலாகிப் பெருந்தீங்கு உண்டாவதற்கு ஏதுவாகும்.

நாம் ஒரு வில்லை வளைத்தாலும், ரப்பரையாவது கம்பியையாவது இழுத்தாலும், அதனால் அவற்றின் பரிமாணம் மாறுபடுவதில்லை. ஏனெனில், அவை ஒருபுறத்தில் நீண்டால் மற்றொருபுறத்தில் சுருங்குகின்றது. ஒரு கம்பியை இழுத்து நீட்டுவோமானால், அதன் பருமன் குறைந்து மெல்லியதாகின்றதல்லவா? ரப்பரை நாம் பிடித்திழுக்கும்போது அதன் பருமன் குறைந்து மெல்லியதாவது நன்றாய்த் தெரியும். அதனால் அதன் பரிமாணம் மாறுபடாமல் எப்போதும் ஓரேஅளவாயே இருக்கும்; அதன் வடிவம்மாத்திரமே மாறுபடும். அப்படியன்றி, ஸ்பஞ்சு என்னும் கடற்பாசியைக் கையால் பிடித்து அமுக்குவதுபோல் ஒரு பொருளை அமுக்கிப் பரிமாணம் குறுகச்செய்யலாம்; மறுபடி அது தன் இயற்கையான பரிமாணத்திற்கு எழும்புமானால், அந்தக் குணத்திற்குப் பரிமாண ஸ்திதஸ்தாபககுணமென்று பெயர். இதுவரையில் சொன்னதெல்லாம் ஆகாரஸ்திதஸ்தாபககுணமல்லவா? இவ்விரண்டிற்கும் சொரூபத்தில் வேற்றுமை யாதொன்றுமில்லையாயினும், சுலபமாய்த் தெரிந்துகொள்வதற்காக வேறாய்ப் பிரித்ததேயன்றி வேறல்ல. கனபதார்த்தங்களில் பரிமாண ஸ்திதஸ்தாபககுணம் மிகவும் சொற்பமாயிருக்கின்றது. ஆனதுபற்றியே கம்பிகள் இழுக்கும்போது அவற்றின் பரிமாணம் நிலையாகவே மாறிப்போகின்றது. முத்திரையிடும்போது நாணயங்களின் பரிமாணம்

நிலையாகவே சுருங்கிப்போகின்றது. திரவபதார்த்தங்களில் பரிமாண ஸ்திதிஸ்தாபக குணம் அதிகமாயுண்டு. ஆகார ஸ்திதிஸ்தாபக குணம் அவற்றில் இல்லவேயில்லை; ஒரே சமமாய்த் திரவபதார்த்தங்கள் எந்த வடிவத்தையும் ஏற்கும். கூடியவரையில் பரிசோதனை செய்துபார்த்ததில் எவ்வளவு அமுக்கினாலும் நீர்முதலிய திரவபதார்த்தங்கள் தம் இயற்கையான பரிமாணத்தையே பெறுவதாகத் தெரியவருவதனால், அவற்றில் பரிமாண ஸ்திதிஸ்தாபககுணம் பூரணமாய் உண்டெனத் தோன்றுகிறது. அதை அமுக்கவேண்டிய அளவு மிகவும் அதிகமாயிருக்குமானால், அப்பொழுது அதன் பரிமாணம் ஒருவேளை நிலையாக மாறுபடுமோ என்னவோ?

(இன்னும் வரும்.)

கிரிசெல்டா என்னும் நன்மனையாட்டி.

ஐரோப்பாவிலுள்ள இத்தாலியாதேசத்திலே ஸாலஜ்ஜோ என்னும் பட்டணத்தில் அநேகவருஷங்களுக்குமுன்னே குவால்டியேரி என்னும் குறுநிலமன்னன் ஒருவனிருந்தான். அவன் சிறுவனாயும், பெண்சாதி பிள்ளையென்னும் கால்கட்டுகள் இல்லாதவனாயும் இருந்தபடியால், வேட்டையாடுதல்முதலிய விநோதங்களில் காலங்கழிப்பவனாயினான். "நோய்கொண்டாலும் கொளலாம் நூறுவயதளவும், பேய்கொண்டாலும் கொளலாம் பெண்டுகொள்ளலாகாதே" என்றும், "தாலிகட்டுகையிலே தொடுத்து நடுக்கட்டையிலே கிடத்துமட்டும் சவலைதானே" என்றும் கூறியுள்ள ஆன்றோர் வாக்கியங்களை யோசிக்குங்கால், அவன் பிரமசாரியாயிருந்தது ஒருவிதத்தில் மெத்த உத்தமமான காரியமேயாயினும், அது அவனுடைய குடிகளுக்குப் பிரியமில்லாமலிருந்தது. ஆதலால் அவர்கள் அவனிடத்தில் வந்து "ஐயா! தாங்கள் விவாகஞ்செய்துகொள்ளாமலிருந்தால் தங்கள் சந்ததி விர்த்தியாகாமற்போகிறதுமன்றி எங்களுக்கும் பின்னிட்டு அரசனில்லாமற்போகும். இந்தச் சங்கடங்கள் நேரிடாவண்ணம் தாங்கள் அவசியம் மணம்புரியவேண்டும். நற்குடியிற்பிறந்தவளாயும், நற்குண நற்செய்கையுடையவளாயும், தங்கள் மனதுக்கிசைந்தவளாயும் உள்ள கன்னிகையை நாங்களே தேடிக்கொடுக்கிறோம்" என்று விண்ணப்பஞ்செய்துகொண்டார்கள். அரசன் அவர்களைநோக்கி "நண்பர்களே, நான் சொல்வதைக் கேளுங்கள்: செய்யலாகாதென்று நான் தீர்மானித்திருந்த ஒரு காரியத்தை இப்போது செய்யும்படி நீங்கள் என்னை நிர்ப்பந்திக்கிறீர்கள். அதற்கும் உடன்படுவோமென்றாலோ உலகத்தில் எங்கும் துர்க்குணமுள்ள ஸ்திரீகளே நிறைந்திருக்கிறார்கள்; நற்குணமுள்ள ஸ்திரீகளைக் காண்பது மிகவும் அரிதாகவிருக்கிறது. தன் மனதுக்கு ஒத்து நடவாத ஸ்திரீயை ஒருவன் கட்டிக்கொண்டால் அந்த மனிதனுடைய ஸ்திதி எவ்வளவு துக்கமுள்ளதாயிருக்கும்! 'தாயைப்பார்த்துப் பெண்ணைக் கொள்' என்னும் பழமொழியை அனுசரித்து நல்ல தாய் தந்தையர்களைத் தேடி அவர்களுடைய பெண்ணைக்கொண்டால் அவள் எனக்கு

இஷ்டமுள்ளவளாயிருப்பாளென்று சொல்லுகிறீர்கள். தாய்தந்தைகள் நல்லவர்களாயிருந்தாலும் அவர்கள் வயிற்றிற்பிறக்கும் எல்லாப்பெண்களுமே நல்லவர்களாய் இருக்கிறார்களா? எத்தனை பெண்கள் தங்கள் தாயைப்போலிராமல் அவர்கள் குணத்துக்கு நேர்விரோதமான குணமுடையவர்களாயிருக்கிறார்கள். என்னைச் சம்சாரவலையில் சிக்கும்படி செய்ய நீங்கள் இவ்வளவு ஆவலாயிருக்கிறீர்கள் போலும். ஆயினும் பின்னிட்டு அரசனில்லாமற்போகுமென்று நீங்கள் வருந்துகிறபடியால் நான் அதற்கு உடன்படவேண்டியிருக்கிறது. ஆனால் கன்னிகையை நானே பார்த்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தாவிட்டால் அதில் ஒரு பிசகுநேர்ந்தாலும் அது என்னைச் சார்ந்ததாகவேயிருக்கும். நான் யாரை மணம்புரிந்தபோதிலும் நீங்கள் அவளை என்னுடைய பட்டஸ்திரீயைப் போலப் பாவித்து அவளுக்குரிய மரியாதைகளைச் செய்யவேண்டும்" என்று சொன்னான். அதைக்கேட்டு அவனுடைய குடிகள்: "ஐயா! தாங்கள் சொல்வது எங்களுக்கு மிகவும் திருப்திகரமாகவேயிருக்கிறது. தங்கள் சித்தப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறோம்" என்றார்கள். அதன்மேல் அரசன் அவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டான்.

அரமனைக்கு அருகாமையில் ஓர் கிராமமிருந்தது. அதிலே ஏழையான ஒரு இடைப்பெண் இருந்தாள். அவளுடைய நடவடிக்கைகள் அரசனுக்குச் சிலகாலமாகப் பிரியமாயிருந்தபடியால் அவளை விவாகஞ்செய்துகொள்ளத் தீர்மானித்து, மிகவும் ஏழையான அவளுடைய தந்தையை வரவழைத்துத் தன் அபிப்பிராயத்தை அவனிடத்தில் வெளியிட்டான். அதன்பின்பு குடிகளெல்லாரையும் வரவழைத்து அவர்களை நோக்கி "கனவான்களே, நான் விவாகஞ்செய்துகொள்ளவேண்டுமென்கிற எண்ணம் உங்களுக்கு முன்னம் உண்டாயிருந்தது; இப்போதும் உண்டாயிருக்கிறது. கலியாணஞ்செய்துகொள்ளும் விஷயத்தில் எனக்குச் சிறிதும் இஷ்டமில்லாமற்போனபோதிலும் உங்களுடைய திருப்திக்காகவே நான் இந்தக் காரியஞ்செய்யத் துணிந்தேன். நான் யாரை மனைவியாக்கிக்கொண்டபோதிலும் அவளைக் கௌரவப்படுத்துவதாக நீங்கள் வாக்குத்தத்தஞ்செய்திருக்கிறீர்களல்லவா? நான் உங்களுக்குச் சொன்னபடி இதோ செய்யப்போகிறேன். நீங்களும் எனக்குச் சொல்லியிருப்பதை நடத்துவீர்களென்று நம்புகிறேன். அரமனைக்குச் சமீபத்தில் என் மனதுக்கேற்ற பெண் ஒருத்தியிருக்கிறாள். அவளை விவாகஞ்செய்துகொள்ள உத்தேசித்திருக்கின்றேன். ஆதலால் நீங்கள் என் கலியாணத்தைச் சிறப்பித்து என் மனையாட்டியையும் உங்கள் அரசியாக மரியாதைசெய்யவேண்டும். அப்போது நம்மிருதிறத்தாருக்கும் திருப்தியுண்டாயிருக்கும்" என்று சொன்னான். ஜனங்களெல்லோரும் அரசன் அவளை விவாகஞ்செய்துகொள்வது தங்களுக்குத் திருப்திதானென்று அவளைத் தங்கள் எஜமானியாக எண்ணித் தக்க மரியாதைசெய்வதாயும் சொன்னார்கள்.

அப்பால் விவாகத்துக்கு வேண்டிய காரியங்களெல்லாம் செய்யப்பட்டன. அரசன் தன்னுடைய பந்துஜனங்களுக்கும் தன் தேசமெங்குமுள்ள கனவான்களுக்கும் கடிதம்போக்கி அவர்களையெல்லாம் வரவழைத்தான். தன் மனையாட்டிக்கு மிகவும் விலையுயர்ந்த ஆடைகளையும், ஒட்டியாணம், மோதிரம், முடி முதலிய ஆபரணங்களையும் செய்வித்தான். நியமித்ததினத்திலே அவ்வரசன் ஒரு குதிரைமேல் ஏறிக்கொண்டு தன் சிநேகிதர்கள், குடி

கன் முதலானவர்கள் புடைசூழ்ந்துவர, பெண்ணிருக்கும் கிராமத்துக்குப் போய் அவள் வீட்டுக்குச் சமீபமாய்ச் சென்றான். அப்போது அந்தப் பெண் தண்ணீர் மொண்டுகொண்டு வீட்டுக்குப்போய்க்கொண்டிருந்தாள். அரசன் அவளைக் கண்டு, கிரிசெல்டா என்று பேரைச்சொல்லி அழைத்து, அவள் தகப்பன் எங்கிருக்கிறானென்று கேட்டான். அவள் "சுவாமி என் பிதா வீட்டிலிருக்கிறார்" என்று வணக்கமாய்ச் சொன்னாள். அதைக் கேட்டு அரசன் குதிரையினின்றும் இறங்கித் தன்னுடன் வந்தவர்களையெல்லாம் அங்கேதானே நிறுத்திவிட்டு, தான்மாத்திரம் குடிசைக்குள் நுழைந்து அவள் பிதாவைக்கண்டு அவனுடன் தான் அவன் மகளைக் கலியாணஞ் செய்துகொள்ள வந்திருப்பதாயும், ஆனால் தான் அவளைச் சில கேள்விகள் கேட்கவேண்டுமென்பதாயும் சொன்னான். அதற்கவன் உடன்பட, அரசன் அந்தப் பெண்ணை நோக்கி: "நீ எப்போதும் எனக்குத் திருப்தியுண்டாகும்படி நடந்துகொள்வாயா? நான் என்னசொன்னாலும் என்னசெய்தாலும் மனவருத்தப்படாமலிருப்பாயா? எப்போதும் எனக்குக் கீழ்ப்படிந்து நடப்பாயா?" என்று கேட்டான். அவள் "அப்படியே நடந்துகொள்ளுகிறேன்" என்று சொன்னாள். உடனே அவன் அவள் கையைப் பிடித்துக்கொண்டு வெளியே அழைத்துவந்து, அவளுடைய பழைய உடைகளைக் களைவித்துத் தான் கொண்டுவந்த நூதனமான உயர்ந்த ஆடையாபரணங்களால் அலங்காரஞ்செய்வித்து, முடியையெடுத்து அலங்கோலமாயிருந்த அவளுடைய தலையில் சூட்டினான். அதைப் பார்த்தவர்களெல்லோரும் அதிசயித்துநிற்க, அவர்களை நோக்கி அரசன் "இந்தக் கன்னிகை என்னைத் தன் புருஷனாக ஏற்றுக்கொள்ளும்பக்ஷத்தில் இவளைத்தான் நான் என் மனைவியாக்கிக்கொள்ள எண்ணுகிறேன்" என்று சொல்லிப் பின்பு, நாணித் தலையிறக்கமாய் நின்றுகொண்டிருந்த அந்தப் பெண்ணைப்பார்த்து "என்னை விவாகஞ்செய்துகொள்ள உனக்கு இஷ்டமா" என்றான். அவள் "தங்கள் சித்தம் அதுவானால் அடியேனுக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை" என்றாள். "அப்படியானால் உன்னை என் மனைவியாக்கிக்கொண்டேன்" என்று பகிரங்கமாகச் சொல்லி அவளை ஒரு குதிரைமேலேற்றிச் சிறப்பாகத் தன் அரமனைக்கு அழைத்துக்கொண்டுபோனான்.

கிரிசெல்டா தன்னுடைய ரூபலாவண்ணியங்களாலும் மனோரம்மியமான குணத்தினாலும், ஒரு ஏழை இடையனுடைய பெண்போலிராமல், ராஜகுமாரத்திபோலவே விளங்கினாள். அதைக் கண்டு அவளை முன்னறிந்தவர்களெல்லோரும் ஆச்சரியங்கொண்டார்கள். அவள் தன் புருஷன் சொல்லுக்கு இரண்டு சொல்லாமல் எப்போதும் கீழ்ப்படிந்து நடப்பவளாயும் அவனிடத்தில் மிகுந்த அன்புள்ளவளாயும் இருந்தமையால், அரசன் தன்னைப்போல் பாக்கியவான் இல்லையென்று எண்ணியிருந்தான். அந்த உத்தமி குடிகள் விஷயத்திலும் ஈவு இரக்கமுள்ளவளாயிருந்தபடியால், அவர்கள் அவளைக் கௌரவப்படுத்தித் தங்கள் உயிரைப்போல் அவளை நேசித்துவந்ததுமன்றி அவள் செல்வமும் க்ஷேமமும் உள்ளவளாயிருக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துவந்தார்கள். "ஒரு நாட்டுப்புறத்துப் பெண்ணிடத்தில் இவ்வளவு யோக்கியதை இருந்ததை வேறு யார் கண்டுபிடிப்பார்கள்? அதைத் தெரிந்துகொண்ட நம்முடைய அரசன் மெத்த விவேகமுள்ளவன்" என்று அனைவரும் அவனைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். கிரிசெல்டாவினுடைய நற்குணங்களும்

நன்னடக்கைகளும் அவளிருந்த ஸாலஜ்ஜோ என்னும் பட்டணமேயன்றி மற்ற இடங்களிலும் ஒவ்வொருவரும் பேசிப்புகழும் விஷயங்களாயின.

இவ்வாறு மேன்மையடைந்திருந்த கிரிசெல்டா சிறிதுகாலத்தில் கர்ப்பவதியாய் ஒரு புத்திரியைப் பெற்றாள். அந்தச் சமயத்தில் அரசன் தனக்குண்டான மனமகிழ்ச்சியால் ஜனங்களுக்குச் சந்தோஷமுண்டாகும்படி விருந்து முதலியவைகளைச் செய்வித்தான். பின்பு, பொறுத்துமுடியாச் சங்கடங்களை உண்டாக்கி அவளுடைய நற்குணத்தைச் சோதிக்கவேண்டுமென்னும் எண்ணம் அரசனுக்குண்டாயிற்று. அதுமுதல் தான் அவள் விஷயத்தில் திருப்தியற்றவன்போலக் காட்டிக் கடுஞ்சொல் சொல்ல ஆரம்பித்தான். அவள் இழிகுலத்திற் பிறந்தவளானதால் தன் குடிகள் அவள்மேல் வெறுப்புற்றிருப்பதாயும், அவ்வெறுப்பு அவள் குழந்தைபெற்றதனால் அதிகரித்துவருவதாயும் சொன்னான். இதைக்கேட்டு அந்தக் குணபூஷணி சிறிதும் முகஞ்சுளிக்காமலும், முன்னிருந்த தன்மை ஒருவிதத்திலும் மாறாமலும் அரசனைநோக்கி "நாயகரே! தங்களுக்கு கௌரவமும் சுகமும் உண்டாகிறதற்காகத் தாங்கள் என்னை என்னசெய்தபோதிலும் எனக்குச் சம்மதிதான். நான் தங்கள் குடிகளில் ஏழையிலும் ஏழையாயிருக்கும் சங்கதியும், தாங்கள் மனம் உவந்து என்னிடத்தில் காட்டிய தயவுக்கு நான் அபாத்திரமானவளென்னும் சங்கதியும், எனக்குச் செம்மையாய்த் தெரிந்திருக்கிறபடியால் தாங்கள் எதுசெய்தாலும் செய்யலாம்; அது எனக்கு முழுமையும் சம்மதமே" என்று பணிவாய்க் கூறினாள். இதைக் கேட்ட அரசன் நாம் இவளை இவ்வளவு உயர்ந்தஸ்திதிக்குக் கொண்டுவந்தும் இவள் சிறிதும் கர்வமடையாமல் அடக்கமாகவேயிருக்கிறாளே என்று உள்ளுக்குள்ளே மெத்த சந்தோஷப்பட்டான். சிறிதுகாலத்துக்குப்பின்பு, அவள் பெற்ற பெண் தன் குடிகளுக்கு வெறுப்பாயிருக்கிறதென்று அவளுடன் அடிக்கடி சொல்லிக்கொண்டுவந்து, ஒருநாள் ஒரு சேவகனை அழைத்து இரகசியமாய் அவனுக்கு ஒரு கட்டளையிட்டு அவனைத் தன் மனைவியிடம் அனுப்பினான். அவன் மிகுந்த துக்கமான முகத்தோடே அவளிடஞ்சென்று "அம்மா, நான் என் யஜமானனுடைய கட்டளைப்படி நடத்தாவிட்டால் எனக்குப் பிராணதண்டனை கிடைக்கும். தங்கள் குமாரத்தியைக் கொண்டுபோய்"—என்றெடுத்து, இன்னது செய்யச்சொன்னாரென்று சொல்ல நா எழாமையால் எடுத்தவாக்கியத்தைப் பூர்த்திபண்ணாமல் அப்படியே நின்றுவிட்டான். கிரிசெல்டா இந்தச் சொற்களைக்கேட்டு, வந்தவனுடைய முகக்குறியையும் பார்த்துத் தன் கணவன் தன்னுடன் அடிக்கடி சொல்லிவந்ததையும் நினைத்துக் குழந்தையைக் கொண்டுபோய்க் கொன்றுவிடும்படி தன் கணவன் உத்தரவு செய்தானென்று தீர்மானித்துக்கொண்டு குழந்தையைத் தொட்டிலிலிருந்தெடுத்து அணைத்து முத்தமிட்டு ஆசீர்வதித்து, பெற்றதாயானபடியால் தன்வயிறு பற்றியெரிந்தபோதிலும் வியசனக்குறியைத் தன் முகத்திற் காட்டாமல், குழந்தையைக் காவலாளன்கையிற் கொடுத்துக் கொடுத்து, அப்பா! இதைக் கொண்டுபோய் நம்முடைய எஜமானர் உத்தரவுப்படி செய்துவிடு. ஆனால் இதைப் பறவைகளும் காட்டுமிருகங்களும் கொத்தித் தின்னும்படிமட்டும் விட்டுவிடாதே. நான் இதைக் கேட்டுக் கொள்வதுகூட நம் யஜமானனுடைய உத்தரவுக்கு விரோதமில்லாமலிருக்

கும்பஸ்தத்தில்மாத்திரமே" என்றாள். சேவகன் குழந்தையை அரசனிடத்திற் கொண்டுபோய்க் கிரிசேல்டா சொன்னதைச் சொன்னான். அதை அரசன்கேட்டு அவளுடைய உறுதியான நிலைமையைப்பற்றி மெத்த ஆச்சரியப்பட்டு அந்தக் குழந்தையை மேற்படி ஆளிடத்திலேயே கொடுத்து அதை போலோனா என்னும் நகரத்துக்குக் கொண்டுபோய் அங்குள்ள தன் இனத்தாளொருத்தியினிடத்தில் ஒப்புவிக்கும்படிக்கும், குழந்தை இன்னாருடையதென்று அவளுடன் சொல்லாமல் அதைப் பாதுகாத்துப் படிப்பிக்கும்படி தான் கேட்டுக்கொண்டதாகமட்டும் அவளுடன் சொல்லும்படிக்கும் திட்டஞ்செய்தனுப்பினான்.

சிறிதுகாலஞ் சென்றபின், கிரிசேல்டா மறுபடி கர்ப்பவதியாய் ஒரு பிள்ளையைப் பெற்றாள். அப்போது அரசனுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. ஆயினும் அவன், தான் முன்செய்தகாரியம் போதாதென்று அதிக அருவருப்புற்றவன்போலக் காட்டி, மனைவியை முன்னிலும் அதிகமாய்ச் சீறுமாறு செய்யத்தொடங்கினான். ஒருநாள் மிகுந்த கோபங்கொண்டவன்போல் அவளைப்பார்த்து "நீ பிள்ளை பெற்றதனால் நான் என் குடிகளுடனிருக்கக்கூடவில்லை. அவர்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து எனக்கு விரோதமாய்க் கலகஞ்செய்கிறார்கள். முன்பிறந்த பெண்குழந்தையைச் செய்ததுபோல் இந்த ஆண்குழந்தையையும் செய்துவிட்டு உன்னையும் நீக்கிவிட்டு, எனக்குத் தகுமான வேறொரு ஸ்திரீயை விவாகஞ்செய்துகொண்டாலொழிய நான் இப்பட்டணத்தில் வசிப்பதற்கில்லை" என்றுசொன்னான். இக்கடுஞ்சொற்களை அந்தக் கற்பரசி மிகுந்த பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்து அரசனை நோக்கி "நாயகரே! என்னைப்பற்றித் தாங்கள் சிறிதுங் கவலைப்படவேண்டியதில்லை. தங்கள் மனதுக்குச் சந்துருஷ்டியும் அமைதியும் உண்டாக்கத்தக்கது எதுவோ அதைப் பாருங்கள். தங்களுக்கு எது திருப்தியாயிருக்கிறதோ அதுவே எனக்கும் ஒத்தது" என்றுசொன்னாள். இந்தச் சம்பாஷணை நடந்த சிலநாளைக்கெல்லாம் அரசன் முன்போல் ஒரு சேவகனை அனுப்பிப் பிள்ளையை வாங்கிக்கொண்டுவரும்படி செய்தான். அதையும் கொன்றுவிடும்பொருட்டே வாங்கிவந்ததுபோலக் காண்பித்துப் பொலோனாவுக்கு இரகசியமாய் அனுப்புவித்து, முன்போயிருக்கும் பெண்ணுடன் இந்தப் பிள்ளையையும் பாதுகாத்துவரும்படி ஏற்பாடுசெய்தான். அரசன் தான் இப்போது செய்த காரியத்தையும் தன் மனைவி முன்போலவே பொறுத்துக்கொண்டிருந்ததைக் கண்டு மெத்த ஆச்சரியப்பட்டு வேறெந்த ஸ்திரீயும் இப்படி பொறுத்திருக்கமாட்டாள் என்று தனக்குள்ளே எண்ணினான். குழந்தைகளிடத்தில் கிரிசேல்டா மெத்த ஆசையும் அன்பும் உள்ளவளாயிருந்ததை அரசன் முதலிலேயே கண்டிருந்தானாதலால், அவள் அக்குழந்தைகளைக் கொடுத்துவிடத் துணிந்தது கணவன்சொல்லைக் கடக்கக்கூடாது என்னும் அவளுடைய உறுதிப்பாடேயென்று தெரிந்துகொண்டான். அப்படி கண்டிரானேயானால், அக்குழந்தைகளிடத்தில் அவளுக்கு ஆசையில்லை; அதனாலேதான் அவைகளைக் கொடுத்துவிட்டாள் என்று எண்ணியிருப்பான். அரசன் தன் குழந்தைகளைக் கொன்றுவிட்டானென்று எண்ணி ஜனங்கள் அவனை மிகவும் கொடுமையும் குரூரமும் உள்ளவனென்று பழித்தார்கள்; கிரிசேல்டாவுக்காக மெத்தப் பரிதாபப்பட்டார்கள். அந்த உத்தமியோ, தனக்கு அறிமுகமான ஸ்திரீகள் தன்னிடத்தில்

வந்தா குழந்தைகள் போய்விட்டதைப்பற்றி வியசனப்படும்போதெல்லாம் "அது என் இஷ்டமல்லவே; அவைகளைப் பெற்றவருடைய இஷ்டமல்லவோ" என்று சொல்லிவருவாள்.

இப்படி சிலவருஷங்கள் கழிந்தபின், அரசன் கடைசியாக ஓர் பரீக்ஷைசெய்ய உத்தேசித்துத் தன் குடிகளை வரவழைத்து அவர்கள்முன் னிலையில் "நான் சிறுவயதில் புத்தியீனமாய் கிரிசெல்டாவைக் கலியாணஞ்செய்துகொண்டேன். இவள் என் அந்தஸ்துக்குத்தக்க மனைவியல்லள். ஆதலால் என் குருவின் அனுமதி பெற்றுக்கொண்டு இவளை நீக்கிவிட்டு வேறொரு கன்னிகையை விவாகஞ்செய்துகொள்ளவேண்டும்" என்று சொன்னான். அதுகேட்டு அவர்களில் அநேகர் அவன்மேல் குறைகூறினார்கள். அவன் அப்படித்தான் ஆகவேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லிவிட்டு வேறொன்றும் பேசாமலிருந்தான். கிரிசெல்டாவோ "நான் மறுபடி என் பிதாவினிடஞ்சென்று முன்போல் ஆடுமேய்த்துக் கொண்டிருக்கவும், என் பிராணநாயகனை வேறொருத்தி அனுபவிக்கவுமா ஆயிற்று!" என்று எண்ணித் தனக்குள்ளே வியசனமுற்றிருந்தபோதிலும் அதை வெளியிற்காட்டாமல், அதற்குமுன் தனக்கு நேரிட்ட இக்கட்டுகளையெல்லாம் எப்படி மனஉறுதியோடு பொறுத்திருந்தாளோ அப்படியே இதையும் பொறுத்துக்கொண்டிருந்தாள். கொஞ்சக்காலத்துக்கெல்லாம் அரசன் ரோமாபுரியிலுள்ள தன் குருவான போப் என்பவரிடத்திலிருந்து வந்ததுபோல ஒரு கடிதத்தை உண்டுபண்ணி, அவர் கிரிசெல்டாவை நீக்கிவிட்டு வேறொரு பெண்ணை விவாகஞ்செய்துகொள்ளத் தனக்கு உத்தரவுசெய்ததாக ஜனங்களுக்கு வெளியிட்டான். அதன் பின்பு கிரிசெல்டாவைக் குடிகளுக்குமுன்னே வரவழைத்து அவளை நோக்கி, "பெண்ணே! என் குருவின் கட்டளைப்படி நான் உன்னை நீக்கிவிட்டு வேறொரு பெண்ணை விவாகஞ்செய்துகொள்ளவேண்டும். என் முன்னோர்களெல்லாம் இந்நாட்டுக்கு அரசர்களாயிருந்தார்கள்; உன் முன்னோர்களோ சாதாரணமான குடிகளாயிருந்தார்கள். இனி உன்னை வைத்திருக்க எனக்கிஷ்டமில்லை. நீ உன் பிதாவினிடத்திலிருந்து எதனுடன் என்னிடம் வந்தாயோ அதனுடன் உன்னை அவ்விடம் அனுப்பிவிட்டு அப்பால் என் அந்தஸ்துக்குத்தக்க ஒரு கன்னிகையை மணம்புரிய நிச்சயித்திருக்கிறேன்" என்று சொன்னான். இதைக்கேட்ட கிரிசெல்டா அடக்கமாட்டாத துக்கங்கொண்டவளாய்த் தன்னையும் மீறிக் கண்ணீர்சோர நின்று சொல்லுகிறாள்: "நாயகரே! நான் எப்போதும் என்னுடைய தாழ்ந்தநிலைமையை ஞாபகத்தில் வைத்திருப்பதால் அந்நிலை தங்களுடைய உயர்ந்த அந்தஸ்துக்குச் சிறிதும் ஒத்ததல்ல என்னும் உணர்ச்சி எனக்கு எப்போதும் உண்டாயிருக்கிறது. இதுவரையில் எனக்கு உண்டாயிருந்த பெருமையும் சுகமும் ஈச்வரகடாக்ஷத்தினாலும் தங்கள் தயவினாலும் கிடைத்தனவாக எண்ணியிருக்கிறேன். அவைகளைத் தாங்கள் எனக்கு இரவல்கொடுத்திருக்கிறீர்கள். இப்போது அவற்றை வாங்கிக் கொள்ளத் தங்களுக்கு இஷ்டம் உண்டாயிருக்கிறபடியால் யாதொரு தடையுமின்றிக் கொடுத்துவிடுகிறேன். தாங்கள் என்னை மணம்புரிந்தபோது என் கையிலிட்ட மோதிரம் இதோ இருக்கிறது, பெற்றுக்கொள்ளுங்கள். நான் கொண்டுவந்த ஸ்திரீதனத்தை மறுபடி கொண்டுபோம்படி ஆஜ்ஞாபித்தீர்கள். அந்தத் தனத்தை என்னை ஒரு கணிகனும்,

போட ஒரு பெரும் பையும், கொண்டுபோக ஒரு குதிரையும் வேண்டுமல்லவா? உடுக்க உடையுமின்றித் தங்களிடம் வந்ததை நான் மறந்துபோகவில்லை. ஆனால் தங்களுக்கு இரண்டு குழந்தைகளைப்பெற்ற இந்த உடம்பை உடையுமில்லாமல் விட்டுவிடத் தங்களுக்கு மனமுண்டாயிருந்தால் அதுவும் எனக்குத் திருப்தியே. ஆகிலும், நான் [தங்]களிடம்வந்தபோது கன்னிகையாகவந்தேன். போம்போது கன்னிகையாகப் போகாமையால் அதற்காகவாவது தயவுசெய்து எனக்கொருவஸ்திரம் கொடுத்தனுப்புவீர்களெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று பணிந்தாள். இதைக் கேட்டபோது அரசனுக்கும் அதிக துக்கம் உண்டாக, அதை ஒருவாறு அடக்கிக்கொண்டு பின்னும் கொடூரமுள்ளவன்போலவே "ஆனால் உனக்கு ஒரே துணிதான் கொடுப்பேன்" என்று சொன்னான். ஜனங்களெல்லோரும் அரசனைநோக்கி "ஐயா! பதின்மூன்று வருஷம் தங்கள் மனைவியாயிருந்த பதிவிரதைக்குப் பின்னும் ஒரு உடைகொடுத்து மானத்தைக் காப்பாற்றலாகாதா" என்று பலவாறு இரந்து கேட்டுக்கொண்டும் அரசன் அவர்களுடைய வேண்டுகோளுக்கு உடன்படவில்லை. ஒற்றைத் துணியோடு அந்த உத்தமி அரசனுடைய அரமனையிலிருந்து, தன்னைப் பார்த்தோரெல்லாம் பரிதபிக்க அழுதுகொண்டு, தன் தந்தையின் குடிசைக்குப்போனாள். அந்த இடையனும் தன் மகளை அரசன் நெடுங்காலம் வைத்திருப்பானென்று எண்ணாமல் அவள் திரும்பத் தன்னிடம் வந்துவிடுவாளென்றே தினமும் எதிர்பார்த்திருந்தானாதலால், கலியாணதினத்தில் அரசன் நூதனவஸ்திரங்களைக் கொண்டுவந்து தன் மகளுக்குத் தரிக்கக்கொடுத்தபோது அவள் கட்டியிருந்து அவிழ்த்துப்போட்ட பழைய உடைகளை எடுத்துப் பத்திரப்படுத்திவைத்திருந்தான். தன்மகள் வந்தவுடனே அவன் அவைகளைக்கொண்டுவந்துகொடுக்க, அவள் அதைவாங்கிக் கட்டிக்கொண்டு, தனக்கு நேரிட்ட பெருந்துன்பத்தை மிகுந்த தைரியத்தோடு பொறுத்துக்கொண்டு, தன் தகப்பனுடைய காரியங்களைப் பார்த்துவந்தாள்.

சிலநாட்சென்றபின், அரசன் தானொரு ராஜகன்னிகையை மணம்புரியப்போகிறதாக வெளியிட்டு அதற்காக வேண்டியகாரியங்களைச் சித்தஞ்செய்கிறவன்போலக் காண்பித்து கிரீசெல்டாவை வரவழைத்து அவளை நோக்கி "நான் புதிதாக விவாகஞ்செய்துகொள்ளும் ராஜகுமாரத்தியை முதல்முதல் அரமனைக்கு அழைத்துவரும்போது அவளுக்குத்தக்கபடி மரியாதைசெய்விக்கவேண்டும். அந்தச் சமயத்தில் வீட்டில் செய்யவேண்டிய ஏற்பாடுகளைக் கிரமப்படி செய்யத்தக்க ஸ்திரீகள் என்னிடத்தில் ஒருவருமில்லையென்பது உனக்குத்தெரியுமே. என் அரமனையைச்சேர்ந்த காரியங்களெல்லாம் உனக்குச் செம்மையாய்த் தெரியுமாதலால் உனக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி வேண்டியகாரியங்களைச் சித்தஞ்செய்து அழைக்கவேண்டிய ஸ்திரீகளை அழைப்பித்து, நீயே வீட்டுக்கு எஜமானிபோலிருந்து இந்தக் காரியங்களையெல்லாம் நடத்தவேண்டும். இந்தச் சுபகாரியங்களெல்லாம் முடிந்தபின்பு நீ உன் பிதாவினிடம்போய்ச் சேரவேண்டும்" என்று சொன்னான். இந்த வார்த்தைகள் நாராசம்போல் கிரீசெல்டாவின் காதுகளிலே புகுந்தன. ஆகிலும் அரசனிடத்திலிருந்த போகத்தை அவள் வெகுசீக்கிரத்தில் துறந்துவிட்டுவந்ததுபோல், அவனிடத்தில் தனக்குண்டாயிருந்த அன்பையும் அவ்வளவு சுலபமாய்த் துறக்கக்கூடாதவளாயிருந்தாள். ஆதலால் அரசனைப்பார்த்து "நாயகரே! தங்களுடைய கட்டளைகளையெல்லாம் நிறை

வேற்றச் சித்தமாயிருக்கிறேன்" என்று சொல்லி, அரமனைக்குள்ளேபோய்த் தானே அதைப்பெருக்கிச் சுத்தஞ்செய்து, வெள்ளாட்டிபோல் தட்டுமுட்டுகளையெல்லாந்துலக்கி, அறைகளையெல்லாம் லக்ஷணப்படுத்தி, சமையல் அறையில் ஆகவேண்டியதற்குந் திட்டஞ்செய்து, எல்லாக்காரியங்களையும் சித்தஞ்செய்துவைத்தாள். இவைகளெல்லாம் ஆனபின்பு அரசன் அழைப்பாகச்சொல்லி அவ்வூரிலுள்ள கனவான்களுடைய ஸ்திரீகளைக் கலியாணத்திற்கு வரவழைத்தாள். முகூர்த்ததினத்திலே அவர்களெல்லோரும் விலையுயர்ந்த ஆடையாபரணங்களைத் தரித்துக்கொண்டு அரமனைக்குவந்தபோது, கிரிசெல்டா தன் எழ்மையான உடுப்புடனே இருந்துகொண்டு அவர்களை மரியாதைசெய்து உள்ளே அழைத்துக்கொண்டுபோனாள். இதுநிற்க;

பொலோனாவுக்கு அனுப்பியிருந்த அரசனுடைய குழந்தைகள் வளர்ந்து மிகுந்த ரூபலாவண்ணியமுள்ளவர்களாயிருந்தார்கள். பெண்ணுக்குப் பன்னிரண்டுவயதும், பிள்ளைக்கு ஆறுவயதும் ஆயிருந்தது. அக்குழந்தைகளைத் தகுந்தபரிவாரத்துடன் கௌரவமாக ஸாலஜ்ஜோநகரத்துக்கு அழைத்துவரும்படிக்கும், அந்தப் பெண்ணைத் தனக்கு விவாகஞ்செய்து கொடுக்கப்போகிறதாக வழியில் சொல்லிவரும்படிக்கும், வேறொன்றையும் வெளியிடவேண்டாமென்றுங்கண்டு, அவர்களை வளர்த்துவந்த ஸ்திரீக்கு அரசன் கடிதம் போக்கினான். அந்தப்பிரகாரமே அந்த ஸ்திரீயும், பெண்ணையும் பிள்ளையையும் அழைத்துக்கொண்டு அநேகம் பிரபுக்கள் தங்களைச் சூழ்ந்துவரப் பிரயாணமாய்ச் சிலநாள் வழிநடந்து ஒருநாள் பகல் சாப்பாட்டுவேளைக்கு ஸாலஜ்ஜோநகரத்தை அடைந்தாள். அப்போது, புது அரசியைப்பார்ப்பதற்காக, அந்நகரவாசிகள் அரமனையண்டை ஒருங்குசேர்ந்திருந்தார்கள். அங்கிருந்த ஸ்திரீகள் இளவரசியை மிகுந்த மரியாதையுடன் ஏற்றுக்கொண்டு உள்ளே அழைத்துப்போனார்கள். ஏழையைப்போல் உடைதரித்திருந்த கிரிசெல்டா முகமலர்ச்சியுடன் எதிர்சென்று அவளுக்கு நல்வரவுகூறி உபசரித்தாள். அங்குவந்திருந்த ஸ்திரீகளெல்லோரும், கிரிசெல்டா இருந்த பரிதாபமான வேஷத்தைப் பார்க்கப் பொறுதவர்களாய், அவளைத் தனியே ஒரு அறையிலிருக்கச் செய்யவேண்டுமென்றும், சபையில் வருகிறதாயிருந்தால் வேலைக்காரிபோல் வராமல் அவளுடைய நல்லவஸ்திரங்களை உடுத்திக்கொண்டு வரவேண்டுமென்றும், அரசனை மிகவும் வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். ஆயினும் அவன் அதற்கு உடன்படவில்லை. பின்பு ஸ்திரீகளெல்லோரும் தங்கள் தங்களிடத்தில் உட்கார்ந்தார்கள். புதிதாய்வந்த கன்னிகையின் ரூபலாவண்ணியத்தைப் பார்த்து அங்குள்ளவர்களெல்லாம் மெத்த ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தார்கள். கிரிசெல்டா அந்தக் கன்னிகையையும் அவள் சகோதரனையும் மிகவுங்கொண்டாடினாள்.

அத்தருணத்தில் அரசன் "நம்முடைய மனைவியின் பொறுமையைப் போதுமானவரையில் நாம் பலவிதத்திலும் பரிசோதித்துப் பார்த்தோம்; அவளுடைய உறுதியான நிலைமை எதிலும் மாறவில்லை; அவளுடைய தன்மை ஒரேமாதிரியாக இருக்கிறது. அவள் மிகுந்த புத்திசாலியாதலால் மூடத்தனத்தினால் இப்படி நடக்கிறாளென்றும் எண்ணக்கூடாது. ஆதலால் இன்னும் அவளைச் சோதிக்கவேண்டிய அவசியமில்லை. அவள் ஒருவருக்குந் தெரியாமல் தன் மனதிலேதானே படுங்கொடுந் துன்பத்தினின்றும் அவளை இப்போது விடுவிக்கவேண்டும்" என்று தனக்குள்ளே தீர்மானித்துக்கொண்

டு, எல்லோரும் ஒன்று சேர்ந்திருக்கும் அம்மகாசபையின்முன்னே அவளை வரும்படிசெய்து, புன்னகையோடு அவளை நோக்கி "கிரிசெல்டா! நான் கலியாணஞ்செய்துகொள்ள உத்தேசித்திருக்கும் இந்தக் கன்னிகையைப் பற்றி நீ என்னநினைக்கிறாய்?" என்றான். அதற்கவள் "ஐயா! இவளைப் பார்க்க எனக்கு மிகவும் பிரியமாயிருக்கிறது. இவள் எவ்வளவு அழகுள்ளவளாயிருக்கிறாளோ அவ்வளவு அறிவும் உள்ளவளாயிருந்தால் தங்களைப் போல் பாக்கியவான் இவ்வுலகத்திலில்லையென்று துணிந்துசொல்லலாம். ஆனால் நான் தங்களை வணங்கிக் கேட்டுக்கொள்ளும் மனு ஒன்றுண்டு. அதாவது, தாங்கள் மூத்தமனைவியினிடத்தில் நடந்ததுபோல அவ்வளவு குரூரமாக இவளிடத்திலும் நடக்கக்கூடாது. ஏனெனில் அவள் அடிநாள்தொடங்கிக் கஷ்டமே அனுபவித்துவந்தவள். இவளோ அருமையாய் வளர்த்துப் படிப்பிக்கப்பட்டவள்போலிருக்கிறாள். ஆதலால் இவளுக்குத் தக்கபடி பக்ஷமாகவே நடந்துகொள்ளவேண்டும்" என்று கூறினாள்.

இவைகளையெல்லாம் அரசன்கேட்டு, கிரிசெல்டா அந்தப் பெண்ணைத் தன் புதுமனைவியென்று எண்ணித் தன்னிடத்தில் தாழ்மையாயும் பிரியமாயும் பதில்சொன்னதைக்கண்டு சந்தோஷப்பட்டு, அவளைத் தன் அருகில் உட்காரச்செய்து அவளைநோக்கி "கிரிசெல்டா, நீ உன் நிலைதவறாத பொறுமையின் பிரயோஜனத்தை அடையுங்காலம் இப்போது வந்தது. இதுவரையில் நான் உன்விஷயத்தில் நடத்திவந்த செய்கையைக்குறித்து என்னைக் கெட்டவனென்றும், கடூரமானவன் என்றும், சிருஷ்டியில் என்னைப்போல் தீமையுள்ளது எதுவும் இல்லையென்றும் நினைத்த ஜனங்களெல்லோரும், இப்போது, அவைகளெல்லாம் மனைவி புருஷனிடத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறைமையை அறிவிக்கவேண்டும் என்னும் கருத்துடன் செய்யப்பட்டவையேயொழிய வேறல்லவென்று தெரிந்துகொள்வார்கள். விவாகஞ்செய்துகொள்வதனால் பலவித துன்பங்கள் உண்டாகுமென்று பயந்த நான், நம்மிருவருடைய வாழ்நாள்முழுமையும் சமாதானமாயும் சௌக்கியமாயும் இருப்பதற்குத் தகுந்த ஜாக்கிரதை முன்னமே செய்துகொள்ள வேண்டும் என்கிற எண்ணத்தோடு இப்படிச் செய்தேனென்றும் அவர்கள் இப்போது அறிந்துகொள்வார்கள். உன்னைப் பல கடுமையானவிதங்களில் சோதித்துப்பார்த்தேன். செய்கையிலாவது வார்த்தையிலாவது நீ என் இஷ்டத்துக்கு அணுவளவும் விரோதமாய் நடந்ததாக நான் காணவில்லை. ஆதலால் நான் கோரினபாக்கியம் எனக்கு லபித்ததாக இப்போது எண்ணுகிறேன். உன்னிடத்திலிருந்து பலநாட்களில் நான் பிடுங்கிக்கொண்டவைகளையெல்லாம் ஒருநிமிஷத்தில் உனக்கு மீட்டும் கொடுத்துவிட்டு, நான் உனக்கு உண்டாக்கின கொடுந்துயரங்களுக்கு மாறாகப் பெருங்களிப்பை உனக்கு உண்டாக்குகிறேன். என் புதுமனைவியென்று நீ நினைத்த இந்தப் பெண்ணையும் அவள் சகோதரனாகிய இந்தப் பிள்ளையையும் நம்முடைய பெண்ணும் பிள்ளையுமாக ஏற்றுக்கொள்வாயாக. நான் கடுமையாய்க் கொலைசெய்துவிடச்சொன்னதாக நீயும் மற்றவர்களும் எண்ணியிருந்த குழந்தைகள் இவர்களே. எல்லாவற்றிலும் இருப்பதைப்பார்க்க உன்னிடத்தில் அதிக அன்பும் மதிப்பும் வைத்திருக்கும் நானே உன்னுடைய கணவன். மனைவியுடன் வாழும் புருஷர்களில் என்னைப்போல் பாக்கியவான் ஒருவனுமில்லையென்று நான் ஸ்திரமாய் நம்புகிறேன்" என்றான்.

இவ்வாறு சொல்லி உடனே எழுந்திருந்து மிகுந்த ஆசையுடன் அரசன்

அவளை ஆலிங்கனஞ்செய்துகொண்டான். அவளும் உடனே எழுந்திருந்து ஆனந்தபாஷ்பஞ்சொரிய நின்றாள். அதன்பின்பு இருவரும், நடந்தகாரியங்களைப்பார்த்து இன்னதென்றறியாமல் பிரமைகொண்டு தங்கள் குமாரத்தியும் குமாரனும் இருந்த இடத்திற்குச்சென்று, அவர்களைத்தழுவி ஆசீர்வதித்து, அவர்களுக்கும் அங்கு கூடியிருந்த ஜனங்களுக்கும் உண்டாயிருந்த கிலேசத்தையும் சந்தேகத்தையும் நீக்கினார்கள். இதைக்கண்ட ஸ்திரீகளெல்லோரும் பெருங்களிப்படைந்து எழுந்திருந்து கிரீசேல்டாவை ஓர் அறைக்குள்ளே அழைத்துக்கொண்டுபோய், அவள் முன் தரித்திருந்த விலையுயர்ந்த ஆடையாபரணங்களை அவளுக்கு அணிந்து, கந்தைகட்டிக்கொண்டிருந்த போதும் கட்டழகுடைய அரசிபோலவே விளங்கின அந்த அருந்ததியை அலங்கரித்துச் சபையிற்கொண்டுவந்தார்கள். அங்குவந்திருந்த அனைவரும் அரசனுடைய பெண்ணையும் பிள்ளையையும்பார்த்து ஆனந்தம் அடைந்ததுடன், நடந்தகாரியங்கள் மெத்த நன்றாயிருக்கின்றனவென்று திருப்திகரமாய்ப் பேசிக்கொண்டார்கள். அநேகநாள்வரையில் அந்நகரமெங்கும் உற்சவம்போல ஆடம்பரமாயிருந்தது. அரசன், தன் மனைவியைச் சோதித்தவிஷயத்தில் அதிக கொடுமையுள்ளவனாயிருந்தாலும், விவேகபுஞ்சம் என்று தன் குடிகளால் மதித்துக் கொண்டாடப்பட்டான். கிரிசேல்டாவோ என்றால், நற்குணநற்செய்கைகளில் தனக்கு ஒப்புயர்வில்லாத உத்தமியாக விளங்கினாள்.

சிலநாள் கழிந்தபின், பொலோனாவிலிருந்து வந்த பெருமாட்டி அவ்விடம்போய்விட்டாள். அரசன் கிரிசேல்டாவின் பிதாவை வரவழைத்து அவனைத் தன் மாமனாராகக் கௌரவப்படுத்தி ஆதரித்துவந்தான். அவனும் யாதொரு கவலையுமின்றி நெடுங்காலம் சுகமாய் ஜீவித்திருந்தான். பின்பு அரசன் தன் குமாரத்தியைத் தகுந்த இடத்தில் விவாகஞ்செய்துகொடுத்துவிட்டுத் தான் கிரிசேல்டாவுடன், அவளிடத்தில் அதிக மரியாதையும் கண்ணியமும் உள்ளவனாய், சுகமாக வாழ்ந்திருந்தான்.

ஆதலால், ஆகாயவாசிகளாகிய தேவதைகள் பூமியில்வந்து அற்பக்குடிசைகளிலும் பிரவேசித்திருப்பார்களென்றும், அரசர்களுடைய அரமனைகளிலே, பிரஜைகளைப் பரிபாலிக்கும் திறமையில்லாமல், பன்றிகளைமேய்க்கும் பண்புடைய பிரபுக்களும் உற்பத்தியாவார்களென்றும் சொல்வதேயல்லாமல் வேறென்ன நாம் சொல்லக்கூடும்.

சென்னையில் கட்டப்படும் கப்பல் அடைக்கலஸ்தானத்தைப்பற்றிய உபந்நியாசம்.

இப்பொழுது நடந்தேறுகிற சென்னைக் கப்பல் அடைக்கலஸ்தானவேலையை விசாரணைசெய்துவரும் முக்கிய சிற்பவல்லவர் (என்ஜினீர்) ஆகிய மேஸ்தர் டபில்யூ-பார்க்ஸ் துரையவர்கள் நாளது பிப்ர்வரிமீ 12உ சனிக்கிழமை மாலை சென்னை விநோதப்பொருட்காட்சிசாலையில் எவரும் ஆநந்தமாய்க் கேட்கத்தக்க உபந்

நியாசம் ஒன்று செய்தார். அதைக் கேட்க அவ்விடத்தில் சீமான்களும் சீமாட்டிகளுமாய் வெகுபேர் வந்து நிறைந்திருந்தனர். கப்பல் அடைக்கலம் கட்டுவதற்குரிய கருவிகளாகிய பெரிய நீர் வாங்குகுழாய், பெரிதாய் உருவாக்கிச்செய்த கற்பாறைமுதலியவற்றின் மாதிரிகள் அவ்விடத்தில் கொண்டுவைக்கப்பட்டிருந்தன. கடலோரவீதியில் கட்டடங்கள் அமைந்திருப்பது, விளக்குக் கூண்டு, கடலில் கப்பல்கள் நங்கூரம்பாய்ச்சி நிற்பது, கப்பல் அடைக்கலஸ்தானத்துக்காக இப்பொழுது வடபுறத்திலும் தென்புறத்திலும் மேடைகட்டியிருப்பது முதலியவற்றோடுகூடக் கப்பல் அடைக்கலஸ்தானத்தின் வரிவடிவமும் ஒரு பலகையில் எழுதப்பட்டது.

சி. எஸ். ஐ. பட்டம்பெற்ற ஆனரெபில் டேவிட்சன் அதற்கு அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்து, அந்த உபந்நியாசம் ஆரம்பிப்பதற்குமுன்னே, தமக்கு அப்பொழுது அந்த உபந்நியாசத்தைக் கேட்கவர அசந்தர்ப்பமென்று சொல்லிக் கனம்பொருந்திய கவர்னரவர்களிடமிருந்துவந்த திருமுகமொன்றைப் படித்தார்.

அந்த உபந்நியாசம் முடிந்ததும் அக்கிராசனாதிபதியானவர், எவர்க்கும் நல்லறிவு கொளுத்தத்தக்கதான இனிய உபந்நியாசம் செய்ததற்காகவும், இச்சென்னைத்துறைக்கு மிகவும் அநுகூலமான கப்பல் அடைக்கலஸ்தானவேலையை வெகு கருத்தோடு விடாமுயற்சியாய் நடத்திவருவதற்காகவும், பார்க்ஸ் துரையவர்களுக்கு வந்தனம்செய்தார். மேலும் இத்தன்மையான வியாபாரம் இவர் இன்னும் எவ்விடத்தில் செய்யப்புகுந்தாலும் இவ்வண்ணமே காரிய சித்தி பெறுவாரென்றும், இச்சென்னையில் கப்பலடைக்கலம் கட்டுவிக்கிறநிமித்தம் இவர் எக்காலத்திலும் லோகோபகாரியாகக் கருதப்படுவாரென்றும் அக்கிராசனாதிபதி நிச்சயமாக நினைத்தார்.

இவ்வண்ணம் தமது உபந்நியாசத்தைப் புகழ்ந்து பேசியதற்காக டேவிட்சன் துரையவர்களுக்கும், அவ்விடத்தில் தயைசெய்திருந்த பின்னும் பல பிரபுக்களுக்கும் சீமாட்டிகளுக்கும் பார்க்ஸ் துரை வந்தனம்செய்தார். அவர் எடுத்துரைத்த உபந்நியாசமாவது:—

"ஓ அக்கிராசனாதிபதிமுதலிய கனவான்களே,- இப்பொழுது நடந்தேறுகிற இச்சென்னைக் கப்பல் அடைக்கலத்துறைக் கட்டடவேலையின் விஷயங்களை ஒரு உபந்நியாசமாய் எடுத்துரைக்கும்படி என்னை வேண்டிக்கொண்டதின்மேல், நான் அப்படியே அதற்கு அங்கீகரித்தேன். ஆயினும் அவ்விஷயங்கள் மிகவும் அதிகமானதுபற்றி அவையெல்லாவற்றையும் ஒன்றுதப்பாமல் எடுத்துரைப்பது அசாத்தியமென்றாலும், யாவரும் ஆவலோடு கேட்கத்தக்க சில விஷயங்களைமட்டும் இங்கு எடுத்துச் சொல்லுகிறேன்.

ஆதியில் இது மிகவும் கஷ்டசாத்தியமானகாரியமென்று யாவரும் ஏகோபித்து அபிப்பிராயப்பட்டதுதான். அது வாஸ்தவமாகவேயிருக்கின்றது.

c.

முதலில் இச்சென்னைத் துறையில் கப்பல் அடைக்கலமொன்று அமைக்க வேண்டுமென்பதைப்பற்றி யாவரும் ஒரேமனதாய் அபிப்பிராயப்பட்டார்களெனினும், அவ்வடைக்கலம் இன்னவிதமாய் உபயோகப்படுமென்பதைப் பற்றிவெவ்வேறு விரோதமான அபிப்பிராயங்களுண்டாகி அதுகாரணமாகச் சிலகொடிய கஷ்டங்கள் நேர்ந்தன. எப்படியெனில், புசல் அடிக்கிறகாலங்களில் அடிக்கடி கப்பல்கள் கரைதட்டி உடைந்து, கைக்கெட்டின தூரத்தில் கரையிலே கோடிஜனங்கள் பார்த்திருந்தும் அவர்கள் உதவிசெய்யக் கூடாமல், அதிலுள்ள ஜனங்களும் சாமான்களும் அநியாயமாய் அழிந்து போம்படி நேர்வதனால், அதற்காகக் கப்பலடைக்கலமொன்று அவசியம் வேண்டுமென அநேகர் எடுத்துரைத்தார்கள். கடலின் இயற்கையை அறியாதவர்களுக்கு இது சரியான யுத்திதானெனத் தோன்றும். ஆயினும் கடலில் பழகியவர்களான மாலுமிகள் இதன்மேல் எடுத்துரைத்த ஆக்ஷேபமாவது: நீங்கள் கட்டக் கருதியவிடம் புசலடிக்கையில் கப்பல்களுக்குச் சிறிதும் ஏற்ற அடைக்கலமாகமாட்டாது; குறுகலானவிடத்தில் அநேகம் கப்பல்கள் ஒன்றாய்க் கூடிக் காற்றிலல்லாடி ஒன்றோடொன்று இடிபடுகிற உபத்திரவத்தைவிடக் கொடியது வேறுண்டோ? ஆதலால் அக்காலத்தில் நாங்கள் விசாலமான நடுக்கடலில் நங்கூரம்பாய்ச்சிக்கொள்ளுகிறோம்; அதுவும் கூடாதபக்ஷத்தில் கப்பலை நிறுத்தாமலே நடத்திக்கொண்டுபோகிறோம் என்றார்கள். அதைக் கேட்கையில் குற்றங்கூறுபவர்களுக்குக் களிப்பு அதிகமாகுமல்லவா? பெருங்காற்றடிக்கும்போது கப்பல் தங்கக்கூடாத பக்ஷத்தில், அப்படிப்பட்ட கப்பலடைக்கலஸ்தானம் கட்டுவதிற் பயனென்னவென்று அவர்கள் ஆக்ஷேபம்செய்தார்கள்.

அதன்மேல் லோகோபகார நினைவுள்ள மற்றொருவர், திருங்கொமாலிக்கும், ஊக்கிலி நதிக்கும் மத்தியில் பத்திரமாய்க் கப்பல் அடைக்கலம் புகுமிடம் ஒன்றுகூடக் கிடையாதாதலால் அப்படிப்பட்டவிடமொன்று இன்றியமையாததென எடுத்துரைத்தார். அதற்கும் கப்பற்காரர்கள், பெரும் புசலடிக்கையில் நாங்கள் ஒருவேளை வங்காளக்குடாக்கடலில் அகப்பட்டுக்கொண்டாலும், அதினின்றும் தப்பித்துக்கொண்டு போகத்தக்க சாமர்த்தியம் எங்களுக்குண்டு; ஆதலால் அடைக்கலஸ்தானத்தில் போய்ப் புக அவதிப்படச் சம்மதமில்லை என்றேசொன்னார்கள். அதைக்கேட்டு தூஷணைசெய்பவர்கள் ஜயம்பெற்றவர்கள்போலெழுந்து, ஆயின் நாம் முயற்சி செய்யவேண்டுவதே இல்லையென்றார்கள்.

ஆலோசித்துப்பார்க்கையில் இவை யாவும் அதிசயோக்தியாகவே முடிகின்றன. கப்பல் அடைக்கலம் கட்டவேண்டுமென்றவர் இயற்கையின் நிலையறியாமல், அது கப்பல்களுக்கு ஒவ்வொரு தருணத்தில் தங்குவதற்குத் தகுந்தவிடமாகுமென்று சொல்வதைவிட்டு, பெரும்புசலில் [illegible]மையாத அடைக்கலமென்றார். அப்படியே கப்பல்தலைவரு[illegible]மக்கு அநாவசியகமென்ற வீராவேசத்தோடு அது தமக்கு [illegible] தேவையில்லையென்றார்.

வாஸ்தவத்தில் புசலடிக்கையில் ஒதுக்கிடம், கப்பல்களுக்கு ஓரடைக்கலமாகாமற்போகாது. மேலும் கப்பல் அடைக்கலம் கட்டவேண்டுவது அவசியமா அல்லவா என்கிற கேள்வி இது ஒன்றினாலேயே சாந்தமாவதில்லை; அதற்குள்ள மற்றக் காரணங்களையும் சற்று யோசித்துப்பாருங்கள்.

இவ்விந்துதேசமெல்லாம் பின்புறத்திலும், முன்புறத்தில் சமுத்திரமாகிய பெரும்பாதையுமாய் இச்சென்னைநகர் அமைந்திருக்கின்றதல்லவா? மேலும் நாட்டுச்சரக்குகள் பலவிடங்களிலிருந்தும் எளிதில்வந்து சேரும்படி பல இருப்புப்பாதைகளும் வாய்க்காலும், தேசாந்தரச்சரக்குகள் வந்துபோகச் சிறந்த கப்பல்துறையுமாய் இது பெரிய வர்த்தகநகரமாயிருக்கின்றது. இப்படியிருந்தும் கரையிலுள்ள சரக்கு கப்பல்போய்ச் சேரக்கூடாமல் அதற்குப் பெருந்தடையொன்றிருக்கிறது. அதாவது கடலின் கரையோரத்திலுள்ள பேரலைகளே. அவ்வலைகள், அவ்வழியாய்ப் போய்வருபவர்க்கு மிகுந்த வருத்தமுண்டாக்குவதுமாத்திரமேயன்றிச் சரக்குகளுக்கு மிகவும் கெடுதி விளைவிக்கின்றன. மேலும் கப்பலுக்கும் கரைக்குமுள்ள இந்தச் சிறிது தூரம் சரக்குகள் கொண்டுபோகச் செல்லும்செல்வு, இருப்புப்பாதை வழியாக நாற்பதுமைல்தூரம் கொண்டுபோவதற்கும், கடல்மார்க்கமாய் ஆயிரம்மைல்தூரம் கொண்டுபோவதற்கும் செல்லும் செலவுக்குச் சரியாவதுமாத்திரமேயன்றி, சரக்கும் நனைந்து கெட்டுப்போகின்றது; களவுபோகின்றது; ஒவ்வொரு தருணங்களில் அலைகளின் வழியாய்க் கப்பலுக்கும் கரைக்கும் போக்குவரவு செய்வதே சிறிதும் கூடாமற்போகின்றது.

புசலடிக்கும்போதுதான் இந்தக் கஷ்டங்கள் உண்டாகின்றனவென்றில்லை; என்றைக்கும் எந்தக்கஷ்டமும் ஏறக்குறைய ஒருவாறு இருந்துகொண்டேயிருக்கின்றன. இவற்றைத் தீர்க்கிறவழி ஒன்றுமில்லையாவென்கிறீர்களோ? ஒன்று உண்டு. அதாவது, கப்பலடைக்கலம் கட்டுவதுதான். அப்போது சரக்குகளைக் கப்பலுக்கு ஏற்றவும் இறக்கவும் மிகவும் அனுகூலமாகும்; அதற்குச் செல்லும் செலவும் இப்போதிருக்குமளவில் மூன்றிலொருபங்காகச் சுருங்கும்; அப்போது படவுகளையும் ஏற்றபடி இப்போதிருப்பதைப்பார்க்க நன்றாகவும் பெரிதாகவும் செய்துகொள்ளக்கூடுமாதலால், சரக்கு நனைந்து கெட்டுப்போகமாட்டாது; திருட்டுமுதலியவைகளால் நஷ்டமும் நேரிடாது; அதிகமான காற்றுமுதலியவற்றால் சரக்கு இறக்கக்கூடாமல் கப்பல்கள் தாமதப்படுவதற்கும் அவசியமிராது. சரக்குகளைக் கப்பலுக்கு ஏற்றவும் இறக்கவும் செல்லும் செலவில் மிகும்பணமாத்திரமே குறைந்தது கப்பலடைக்கலம் கட்டப்பிடிக்கும் பணத்தின் வட்டிக்கு ஆகும். அதன்மேல், சரக்குகள் சேதப்படாமலிருப்பதும், உத்தாவாத[illegible]ன்படிக்கைச் செலவு மிகுவதும், கப்பலுக்குப் போய்வருபவர்க்குச் சௌக்கியம் அதிகமாவதும், கப்பல்களை அதிகநாள் நிறுத்திவைத்துக்கொள்ளாமலிருப்பதும், கப்பலின் புறங்களுக்கும் கப்பிக்கயிறு முதலியவற்றிற்கும் அதிகமாய்த் தேய்வு நேரிடாமலிருப்பதும், கப்பலுக்கும் கரைக்கும் யதேச்சையாய் வேண்டும்போது வருத்தமின்றிச் செய்தி தெரிவித்துக்கொள்ளும்படியாவதும், காற்றடிக்கும்போது கப்பலுக்கு அடைக்கலமாவதும் இவைமுதலாக விளைகின்ற பல நன்மைகளும் நமக்கு லாபமே. மேலும் அப்போது இச்சென்னை சிறந்த வர்த்தகநகரமாகி, கல்கத்தாவுக்குப் போகிற கப்பல்களும் அங்கிருந்து வருகிற கப்பல்களும் இங்கே சற்று வழித் தங்கி வேண்டிய சரக்குகளை உடனே இறக்குமதி ஏற்றுமதி செய்துகொண்டு போகக்கூடுமாதலால், வர்த்தகத்துக்கு மிகவும் அபிவிருத்தியுண்டாகும். பின்னும் இச்சென்னைத்துறை சீனாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் நேர்முகத்தில் இருப்பதால் இதற்கு அதிக சிறப்புண்டாகும்.

இச்சென்னைத்துறையில் கப்பலடைக்கலமொன்று கட்டினால், அது இவ்

வண்ணம் தன் செலவைத் தானே சம்பாதித்துக் கொடுப்பதோடுகூட வர்த்தகத்துக்கு மிகவும் அனுகூலமாகி உலகத்தாருக்கும் நன்மை விளைவிக்கும்.

முதலில் ஏழுவருஷங்களுக்குமுன் இதைக்குறித்து எடுத்துரைத்தபோது இவ்விஷயங்களெல்லாம் அதிவாதமென்று தோன்றினவாயினும், பரீக்ஷை செய்து பார்த்தபிறகு எல்லாம் சரியென்றே அங்கீகரிக்கப்பட்டன. அந்தக் கட்டடத்துச் செலவும் ஆதியில் உத்தேசித்த தொகைக்குள்ளேயே அடங்குகின்றது. இன்னும் அந்த வேலை முற்றுப்பெறவில்லையென்றாலும், இப்போதே படவுக்கூலிகளும் படவுகளில் போய்வருகின்றவர்களுடைய வருத்தமும் வெகுவாய்க் குறைவுபட்டிருக்கின்றன.

மேலும் இச்சென்னைக் கடற்கரையோரமெல்லாம் மணலாயிருப்பதால், அலைகள் அம்மணலை அரித்தரித்துக் கரையோரத்தில் கொண்டுவந்து ஒதுக்கிக் கடல் நெருங்கிவருவதைத் தடுப்பதும் இந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஒரு பிரயோஜனந்தான்.

இப்படி இச்சென்னையில் கப்பலடைக்கலமொன்று அமைக்கவேண்டுமென்னும் ஏற்பாடு சென்ற 1873–௵ இச்சென்னைத் துரைத்தனத்தார்க்கு அறிக்கைசெய்யப்பட்டது. காலஞ்சென்ற லார்ட்டு ஹோபார்ட்டு துரையவர்கள் அப்போது இச்சென்னைக் கவர்னராயிருந்தார். அந்தப் பிரபுவும் இந்த ஏற்பாட்டுக்கு உபபலமாகநின்று அதை அங்கீகரிக்கும்படி இந்திய துரைத்தனத்தார்க்கும், சீமைக்கும் எழுதியனுப்பினார். இப்படி கப்பலடைக்கலமொன்று கட்டுவது கூடவேகூடாதென்று அதைப்பற்றி ஒருவரும் அதிகமாய் ஆக்ஷேபித்துத் தடுக்கவில்லை. ஆயினும் அதற்குப் பிடிக்கும் செலவுவிஷயத்தைப்பற்றிமாத்திரம் பலமான பல ஆக்ஷேபங்கள் உண்டாயின. அதற்கு நான் மதித்துத் தீர்மானித்த தொகை அதன் செலவுக்குச் சிறிதும் போதாதென்றும், இப்பொழுது கப்பல்களுக்குச் சரக்கேற்றவும் இறக்கவும் செல்லும் செலவுமுதலியவைகளில் மிகுமென்று நான் எடுத்துக்காட்டிய தொகை மிகவும் அதிகமென்றும் ஆக்ஷேபித்தார்கள். அப்படியே பதினைந்துமாதகாலம் ஆக்கிரகமாய் அநேகர் போராடினார்களெனினும், கடைசியில் 1875–௵ மார்ச்சுமாதத்தில், முதலில் எடுத்த ஏற்பாட்டின்படியே கப்பலடைக்கலம் கட்டும்படி சீமையில் உத்தரவு பிறந்தது. உடனே வேலை ஆரம்பிப்பதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பிறகு நான் சமர்த்தரென்று தேர்ந்தெடுத்த ஜேம்ஸ் மே துரையவர்கள் இந்த வேலைக்கு விசாரணைத்தலைவராக இவ்விடத்துக்கு அனுப்பப்பட்டார். நான் இங்கிலாந்திலேயே இருந்து இந்த வேலைக்குவேண்டிய யந்திரம் கருவி முதலியவைகளைச் சித்தஞ்செய்யத் துவக்கினேன்.

கப்பலடைக்கலம் கட்டும்படி கடைசியாய் உத்தரவுபிறந்த சில வாரங்களுக்குள் லார்ட்டு ஹோபார்ட்டு துரையவர்கள் யாவரும் கேட்டுக் கண்ணீர் சொரியக் காலஞ்சென்றார். விசாரிக்கப்புகில், இச்சென்னையில் கப்பலடைக்கலம் கட்டுவித்த கீர்த்தி மற்றவர்களைப்பார்க்க அவர்க்கே முக்கியமாய் உரியதென்று உரைக்கவேண்டும்.

வேலை நடந்தேறுகிற வரலாற்றை எடுத்துரைப்பதற்குமுன்னே அந்தக் கட்டடத்தின் சொரூபத்தைப்பற்றிச் சற்று விசாரிப்போம். உட்புறத்தில் அலைமோதாதபடி அலையைத் தடுக்கத்தக்க அணை ஒன்றுபோட்டு, 48-அடி

ஆழமுள்ளவிடத்தில் கப்பல்கள் உள்ளே புகவும் வெளியேபோகவும் கடலில் கிழக்குமுகமாக வழிவைத்து, ஏறக்குறைய 1,000–சதுரகஜம் விசாலமுள்ள பெரிய தடாகமொன்றை வளைத்துக்கொள்ளவேண்டுமென்பது ஏற்பாடு. கடலின் அலை ஏதாவதொன்று அந்தத் தடாகத்திற்குள் வரவேண்டுமென்றால், அந்தச் சிறு வாயிலின் வழியாகவே வரக்கூடும்; அப்படி ஓரலை உள்ளே நுழைந்தாலும் அது அவ்வளவு விசாலமான தடாகம் முழுதும் பரவிக் கடைசியில் அதற்குள் அலை சிறிதும் இல்லாததுபோலவே ஆகிவிடும். மேலும் அலைகள் காற்றின் குணத்தால் தென்கிழக்கு மூலையிலிருந்தும், வடகிழக்கு மூலையிலிருந்துமே வருவதனால், அது அவ்வண்டக்கல்ஸ்தானத்திற்குள் நேராக வந்து நுழையாமல் ஒருபுறமாகவே வந்து புகும். ஆதலின் அந்தக் கட்டடத்திற்குள் தண்ணீரில் சிறிதும் அசைவுகாணமாட்டாது. சமுத்திரமெல்லாம் வடக்கிலும் தெற்கிலுமே விசேஷமாகி, நேர்கிழக்கே மிகவும் சொற்பமாயிருப்பதால் அதன் கலக்கமும் இவ்விடத்தில் உண்டாகித் தங்குகிற கப்பல்களை அலைக்கமாட்டாது.

கடலில் கட்டிய இந்த அணை அடியில் குண்டுக்கற்களைக் கொட்டி மேலே வேண்டுமென்று உருவாக்கி அறுத்த பெரும்பாறைகளைக்கொண்டு கட்டப்பட்டிருக்கின்றது. இது மிகவும் சுலபமான வேலையேயாயினும், சற்று நிதானித்து யோசிப்போமானால், இத்தேசத்தில் எங்கும் சாதாரணமாய் நடத்தப்படுகிற வேலைகள்போல, மேஸ்திரி ஒருவனை ஏற்படுத்தி அவன் இஷ்டப்படி கூலிக்காரர்களைக்கொண்டு செய்விக்கத்தக்க வேலையல்லவெனத் தெளிவாய்த் தோன்றும். 25 டன் எடையுள்ள பெரும்பாறைகள் பண்ணுவதும், தண்ணீர்க்குள் 24 அடி ஆழத்திற்குக் கீழே குண்டுக்கற்களைக்கொண்டு அஸ்திவாரம்போடுவதும் ஆகிய இவையெல்லாம் வேறு ஒத்தாசையில்லாத நாட்டுக்கூலிக்காரர்களால் சிறிதும் செய்துமுடிக்கக்கூடாத காரியம். இவ்விதமான வேலையே அவசியமென்பது ஆலோசனையில்லாமல் ஏற்றுக்கொண்டதன்று; தீரத்தெளிய ஆலோசித்ததில், இதுவே அவசியமென்றும், மற்றெந்த மார்க்கமும் நாம் கருதிய காரியத்திற்கு இவ்வளவு சிறந்ததல்லவென்றும் தெரியவந்ததனால் இதுவே முக்கியமாகக் கொள்ளப்பட்டது.

மற்றவைகளையெல்லாம் தள்ளி இவ்விதமான அணைக்கரையே கட்டும்படி தீர்மானித்ததற்குரிய ஆதாரங்களையெல்லாம் எடுத்துரைக்கப்புகின், இரண்டுமூன்றுநாள் உபந்நியசித்தாலும் போதாது. ஆதலின் அவற்றில் அவசியமான இரண்டொரு சங்கதிகளைமட்டும் எடுத்துரைப்போம்.

அணைக்கரை ஓரங்களில் சாய்வாகக்கட்டுவதுமுண்டு; செங்குத்தாகக் கட்டுவதுமுண்டு. கடலின் அலைகள் வந்து மோதுவதை உறுதியாய்த் தாங்கத்தக்கது செங்குத்தாகக் கட்டிய கரையா, சாய்வாகக்கட்டிய கரையா என்பதைப்பற்றி அநேகவருஷங்களுக்குமுன்னே எஞ்சினியர்களுக்குள் ஒரு சர்ச்சை உண்டாயிற்று. சாதாரணமாய்க் கடற்கரைகளில் காணப்படுவதுபோல மணல்களை அரிந்தரித்துச் சரிவாக்குவது அலைகளின் இயற்கையாதலால், அவ்வியற்கைக்கேற்றபடியே கடலில் கட்டுகிற அணைக்கரைகளும் கடற்புறத்தில் கூடியவரையில் சாய்வாக இருக்கவேண்டுமென்று ஒரு பக்ஷத்தார் எடுத்துரைத்தார்கள். கடலோரங்களிலுள்ள செங்குத்தான பெரிய பாறுங்கற்களில் அநேகமாயிரம் வருஷகாலமாய் அலைகள் மோதிக்கொண்

டிருந்தும் அவற்றில் யாதொரு கெடுதியும் காணப்படவில்லையாதலால், புதிதாய்க் கட்டுகிற கரையும் அவ்வளவு உறுதியான கற்களைக்கொண்டு செங்குத்தாகவே கட்டப்படுமானால் அதற்கு யாதொரு பழுதுமில்லையென்று மற்றொரு பக்ஷத்தார் எதிர்வாதமாடினார்கள்.

பின்பு அலைகளின் இயற்கையைப்பற்றி இரண்டு பக்ஷத்திலும் விசேஷமாக விசாரங்கள் செய்யப்பட்டன. கடைசியில் அது செலவு விஷயத்தில் வந்து முடிவானதாகத் தெரியவருகின்றது. அநேக விடங்களில் இவ்விரண்டு விதத்தினாலும் அணைக்கரைகள் கட்டப்பட்டுச் சீர்குலையாமலிருக்கின்றன.

இப்பொழுது இங்கே எந்த முறைமைப்படி கரை கட்டத்துவக்கினால் செலவு சுலபமாகுமென்பதைச் சிந்தி ஆலோசிக்கவேண்டும். பொதுவாய்ப் பார்க்கையில், எவ்விடத்தில் கற்கள் விசேஷமாயும் நயமாயுமிருக்கின்றனவோ அங்கே கடலின் செயலுக்கேற்கச் சாய்வான கரையே கட்டலாம். கற்கள் அகப்படுவது கடினமாகி, கூடியவரையில் கற்களைக் கொஞ்சமாகவே உபயோகித்துக் கட்டவேண்டுமென்று தோன்றுகிற விடங்களில் செங்குத்தான கரை கட்டுவதே நலம். செலவு சுலபமாயிருக்கிறதென்கிற காரணமொன்றினாலேயே இச்சென்னையில் இப்போது இரண்டாவது முறைமை ஏற்றுக்கொள்ளப்பட்டது. சாய்வாகக் கரைகட்ட எவ்வளவு செலவுபிடிக்குமோ, அதில் பாதிச்செலவிலேயே செங்குத்தான கரைகட்டித் தீருமெனத் தெரியவந்தது. எவ்விதமான கரைகட்டினாலும் இச்சென்னையில் கற்கள் கிடையா; வெகு தூரத்திலிருந்து இருப்புப்பாதைவழியாய் ஒரு பாரத்துக்கு இவ்வளவென்று கூலிகொடுத்துக் கொண்டுவரவேண்டும். ஆதலின் அநேகமாயிரம் பாரம் கற்கள் கொண்டுவந்து அவற்றை அப்படியே கடலில் கொட்டிவிடுவதைப்பார்க்கச் சில பாரம் கற்கள் கொண்டுவந்து அவற்றைச் செங்குத்தான சுவர்கட்டுவதற்கு ஏற்ற கருவியாக மாற்றிக்கொள்வது நலமல்லவா?

கடலில் நீர்மட்டத்துக்கு உள்ளேயாயினும், அதற்குமேல் சிறிதுதூரம் வரையிலாயினும் சுண்ணாம்பைப் பிரயோகிப்பது கூடாதாகையால், செங்குத்தான சுவர் சிறிதும் சுண்ணாம்பில்லாமலே கட்டவேண்டும். ஆதலின் அதற்கேற்க, ஒரு பாறைக்கும் மற்றொரு பாறைக்கும் இடையில் சிறிதும் சந்துகொடாமல் ஒன்றோடொன்று நன்றாய்ப் பொருந்தும்படி அவற்றின் பக்கங்கள் செம்மையாய்ச் சமப்பட்டிருக்கவேண்டும். இயற்கையான பெரிய பாறைகளையே வெட்டிக்கொண்டுவந்து போட்டுக் கரைகட்டும்படி முதலில் ஏற்பாடு செய்தார்கள். ஆயினும் கடலில் செய்கிற வேலைக்குப் பலவிதமான முரட்டுக்கற்களையும் சேர்த்து வேண்டியபடி பெரிய பாறைகள் செய்துபோட்டுக் கட்டுவதே எங்கும் ஏற்ற வழக்கமாயிருக்கின்றது. இப்படியானால் நமக்கு வேண்டிய அளவிற்குப் பலவிதமாய்க் கற்கள்செய்து அறுத்துக் கொள்ளலாம். மேலும் இயற்கையான பாறைகளையே உபயோகிக்கிறதென்றால், சதுரமாக்கத்தக்கதாய் 10 டன் எடையுள்ள பாறைகள்கூட அகப்படுவது கடினம். சாதாரணமாய் இரண்டு மூன்று டன் எடையுள்ள பாறைகள்தாம் அகப்படும். இப்பொழுது இங்கு உபயோகப்படுத்துகிற செயற்கைப் பாறைகளோ 27 டன் எடையுள்ளவை. இவ்விதமான வேலைகளுக்கு அநேகவிடங்களில் ஏறக்குறைய இந்த அளவான பாறைகளே உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் சிலவிடங்களில் மிகப் பெரிய பாறை

களையும் உபயோகித்திருக்கிறார்கள். தப்லின் நகரத்தில் 350 டன் எடையுள்ள பாறைகள் கரைமேலே செய்துகொண்டுபோய், அதற்கென்று செய்வித்த யந்திரங்களைக்கொண்டு இறக்கிக் கட்டடம் கட்டியிருக்கிறார்கள்.

செங்குத்தான சுவர்கட்டுகிற முறையையே ஏற்றுக்கொள்கிற பக்ஷத்தில் சிற்பிகள் தாமே நிதானித்து நிச்சயிக்கவேண்டிய சில விஷயங்கள் உண்டு. சாய்வான கரை கட்டும்பக்ஷத்தில் இவ்விஷயங்களைக் கடல் தானே தீர்த்துக்கொடுக்கும். எப்படியெனில், முதலில் ஒரு குப்பல் கற்களைக் கடலில் கொண்டு கொட்டுவானானால், அது முதலில் கொஞ்சம் குத்தான சார்பாய் அமையும். ஆயினும் கடலின் அலைகள் அதை ஒவ்வொன்றாய் அரித்தரித்து அகற்றிவிடும். அவ்வுயரம் போதாதபக்ஷத்தில் அதன்மேல் பின்னும் கற்களைக்கொண்டு கொட்டி அது எந்த அளவாக நின்றால் அசையாதிருக்குமோ அந்த அளவுக்கு அமைத்துக்கொள்கிறான்.

செங்குத்தான சுவர் கட்டுகிற விஷயத்தில் இப்படியன்று; கடல் அவனுக்குச் சிறிதும் சகாயம் செய்வதில்லை. அனுபவத்தாலேதான் அந்த விஷயத்தில் கடலின் செயலைக் கண்டுகொள்ளவேண்டும். முதலில் சிற்பி போட்ட சுவர் சமுத்திரராஜனுக்கு இஷ்டமாயிராவிட்டால் அவன் அதைத் தள்ளிவிடுகிறான். பிறகு தப்பிதம் எங்கிருக்கிறதோவென்று தானே தேர்ந்தறிந்து சிற்பி அதைத் திருத்திக்கொண்டு மறுதடவை சரியாகச் செய்யவேண்டும். இவ்வாறு பலதடவை செய்து பரிக்ஷபார்த்துச் சில விஷயங்களை நன்றாக நாம் இப்பொழுது தெரிந்துகொண்டிருக்கிறோம். நீர்மட்டத்துக்குள் எவ்வளவு ஆழம்வரைக்கும் சமுத்திரராஜன் நமக்கு விரோதம் செய்கிறானோ, அவ்வளவு ஆழம் நாம் அஸ்திவாரம் போடவேண்டும். கடலின் அடிப்புறத்தில் இயற்கையான அஸ்திவாரம் கெட்டியான கற்களாகவே இருக்குமானால், அதன்மேல் கெட்டியான கற்களைக்கொண்டே நாம் கட்டடம் கட்டிவிடலாம்; சமுத்திரராஜனுக்கும் அது திருப்திகரமாயிருக்கும். இச்சென்னைக் கரையில் கற்களேயில்லையே; எல்லாம் மணலாய்க் கிடக்கின்றனவே.

அலைகளுக்கு அதிகமான பலம் நீரின் மேல்மட்டத்திலேதான் என்று அனுபவத்தால் காணப்பட்டிருக்கின்றது. கொஞ்சம் ஆழத்திற்குக் கீழ் கடல் நீரில் அசைவே கிடையாது. ஆயின் அவ்வாழத்தின் அளவு அலையெழும்புகிற உயரத்திற்குத் தக்கபடி வேறுபடும். அவ்வாழத்திற்கு மேலெல்லாம் ஒருவாறு அலையுண்டு. அவ்வலைகள் நீரின் மேல்மட்டத்துக்கருகில் அநேகம் பாரம் எடையுள்ள பெரும்பாறைகளைப் புரட்டித் தள்ளும்படி அத்தனை வலிவுள்ளவையாயிருக்கும்; அதற்குச் சிறிதடி ஆழத்தின் கீழ்க் குண்டுக்கற்களை அசைக்கத்தக்க வலிவுள்ளவையாய் இருக்கும்; அதற்கும் அதிக ஆழத்தில் மணலை அசைக்கந்தக்க வலிவுள்ளவையாயிருக்கும்; அதற்கும் அதிக ஆழத்தில் மண்ணை அசைக்கத்தக்க வலிவுள்ளவையரயிருக்கும். தட்டுத்தடையின்றி அலைகள் முன்னும் பின்னும் ஓடிவரும்படி இந்தப் பொருள்கள் அவ்வளவு சார்வாய் அமைக்கப்பட்டிருக்குமானால், இவை அந்தந்த மட்டங்களுக்கு மேலேகூட அசைவற்றிருக்கும். அந்தச் சார்வான தரையில் குறுக்காய் ஏதாவது ஒரு பொருளைத் தடையாக வைப்போமானால், அலையின் ஓட்டம் தடுக்கப்படுகின்றது. அதனால் உண்டாகிற கெடுதியென்னவெனில், அந்தத் தடைக்குக் கீழ் ஆதாரமாயுள்ள பொருளை அலை அறுக்க ஆரம்பிக்கின்றது.

ஆயினும் மேற்சொன்ன மட்டங்களுக்குக் கீழே அந்தத் தடை வைக்கப்படுமோனால் அவ்விடத்தில் அதை அறுக்கத்தக்க வலிமை அலைக்குக் கிடையாது. அந்தத் தடை செங்குத்தான சுவராகவேயிருக்குமானால் அதன் அஸ்திவாரம் உலர்ந்த தரையிலிட்ட அஸ்திவாரம்போலவே யாதொரு அபாயமும் இல்லாமல் பத்திரமாயிருக்கும். ஆதலின், தண்ணீர்க்குள் எந்தெந்தப் பொருள் எவ்வளவு ஆழத்தின் கீழ் அலையின் செயலால் அசைக்கப்படாமல் ஸ்திரமாயிருக்குமென்பதை முதலில் நாம் கண்டுகொள்ளவேண்டுவது அவசியம். பிறகு அந்த மட்டத்துக்குமேல் கீழ்மட்டத்துக்குரிய பொருள்களை நமது கட்டடத்துக்கு உபயோகப்படுத்தாமல் நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

இந்த விஷயம் மேற்பார்வைக்கு வெகு சுலபமாயிருப்பதாகத் தோன்றினும், அலைகளோடு நெடுங்காலம் வருந்திப் போராடாமல் இதைக் கண்டுகொள்வது அசாத்தியமாயிருந்தது. சாதாரணமாய் ஜனங்கள் நினைக்கின்றபடி சிற்பிகள் தமக்கு வேலை கொடுப்பவர்களுடைய பொருளைப் பிரயோஜனமில்லாமல் வீணாய் ஒருபோதும் செலவுசெய்கிறவர்களல்லர். ஆதலால் தண்ணீர்க்குள் செங்குத்தான சுவர் கட்டுவதற்கு அஸ்திவாரம் இவ்வளவு ஆழத்தின்கீழ்ப் போடவேண்டுமென்கிற விஷயம் பரிசோதனைகளால் தெளிவாகத் தெரிகிறவரையில், தண்ணீர்க்குள்ளே குளிகாரரைக் கொண்டு கட்டவேண்டியதாயும், கஷ்டசாத்தியமாய் மிகச்செலவு பிடிக்கத்தக்கதாயும் இருக்கின்ற வேலையைக் கைக்கொள்வதற்கு இல்லை. இவ்விஷயத்தில் சமுத்திரராஜனுடைய சகாயம் ஒன்றுமில்லை. அவரவர்க்குத் தோன்றியபடி ஓரளவைக்கொண்டு கட்டினால், தன் வலிமைக்குச் சாத்தியமாகாத மிகப் பெரியபாறைகளைக்கொண்டு தன்னுடைய ராஜ்யத்தை எதிர்த்ததுகண்டு சமுத்திரராஜன் மிகக் கோபங்கொண்டு அந்தப் பாறைகளின் அடிப்புறத்திலும் ஓரங்களிலுமுள்ள சிறு கற்களை நன்றாய் அறுத்துப் பள்ளங்கல்லிக் கடைசியில், அந்தச் சுவர் எவ்வளவு உறுதியாகக் கட்டப்பட்டிருந்தபோதிலும், அது புரண்டு கீழே வீழ்ந்துபோம்படி செய்துவிடுகிறான்.

அதனால் சிற்பிகள் கடல் நீர்மட்டத்துக்குள் ஆறடி ஆழம் அஸ்திவாரம் போடவேண்டுமெனக் கண்டறிந்து, அப்படியே குளிகாரரைக்கொண்டு அவ்வளவு ஆழத்தில் அஸ்திவாரம் போடுவித்தார்கள். ஆயினும் அதுவும் போதாது. அதையடுத்த மேல்மட்டத்தில் நீருக்கு அதிக வேகமில்லையாதலால் அது அந்த அஸ்திவாரத்தைத் தற்காலத்தில் ஒன்றும் செய்யவில்லை. அதனால் அதுவே நிலையானதென்று பிரமைகொண்டிருக்க, உடனே நான்கு மாதத்தில் கடல் மிகக் கொடியதாகி அதையும் அழித்துவிட்டது. அதனால் ஆறடி ஆழம்வரை சமுத்திரராஜனுடைய பொருளெனக் கண்டுகொள்ளப்பட்டது.

பிறகு பன்னிரண்டடி ஆழம்வரையில் முயன்றார்கள். போதுமோ போதாதோவென்று அதுவும் சந்தேகத்திற்கிடமாயிருக்கிறது. ஏனெனில் சிலவிடங்களில் அவ்வளவு ஆழத்தில் காரியசித்தியுண்டாயிருக்கிறது; சிலவிடத்தில் தவறிப்போயிருக்கிறது. மேலும் குளிகாரர் மூழ்கி வேலைசெய்கிறபக்ஷத்தில் பன்னிரண்டடி ஆழத்தில் வேலைசெய்வது எவ்வளவு வருத்தமோ, அவ்வளவு வருத்தந்தான் இருபத்துநான்கடி ஆழத்திலும். அதனால் சந்தேகமில்லாமல் உறுதியானவிடத்தில் அஸ்திவாரம்போடுவதே உத்தமமானதென்று சிலர் சொன்னார்கள். அதன்படியே இச்சென்னையில்

கட்டத்துவக்கிய அணைக்கரையும், அதேசமயத்தில் வேறிடங்களில் துவக்கிய இரண்டொன்றும், சுலபமாய்க் கொஞ்சம் ஆழத்திலேயே அஸ்திவாரம் போடுவதைவிட்டு, இருபத்துநான்கடி ஆழத்தில் அஸ்திவாரம்போட்டுக் கட்டத்துவக்கப்பட்டன. குண்டுச்சற்களைக்கொண்டு அஸ்திவாரம்போடுகிற பக்ஷத்தில் இருபத்துநான்கடி ஆழம் அதிகமேயொழிய, மணலாலேயே அஸ்திவாரம் அமைப்பதற்கு அது சிறிதும் போதாது. இன்னும் அதிக ஆழத்தில் போடவேண்டும்.

இருபத்துநான்கடி ஆழத்தில் பொடிக்கற்களைக்கொண்டு அஸ்திவாரம் போட்டு அதன்மேல் செங்குத்தான கரை கட்டுவதற்குவேண்டிய நியாயங்களை இப்பொழுது எடுத்துரைத்தோமல்லவா? இதைக் கேட்கையில், கடலின் ஆழம் இருபத்துநான்கடிக்கு அதிகப்பட்டிருக்குமிடங்களில் இந்த ஏற்பாடு சரிதான்; அவ்வாழத்திற்குக் குறைந்திருக்குமிடங்களில் என்ன செய்கிறது? இருபத்துநான்கடி ஆழத்திலேயே மணல்நிலையான அஸ்திவாரமல்லவென்றால், இயற்கையாய்ப் பன்னிரண்டடி ஆழத்திற்குக் குறைந்தவிடங்களில் மணல் எப்படி அசைவற்றிருக்கும்? அப்படியே குண்டுக்கற்கள் பன்னிரண்டடி ஆழத்தில் நிலைபெறாதென்றால் ஆறடிக்கும் குறைந்தவிடங்களில் என்னசெய்கிறது என்கிற ஆக்ஷேபம் தானே தோன்றும்.

இச்சென்னையில் அணைக்கரை கட்டுகிறவிஷயத்தில் உண்டான வருத்தமெல்லாம் இந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வதைவிட வேறில்லை. மூன்று நான்கு வருஷங்களுக்குமுன்னே இந்த வேலை துவக்கமாயிருக்கையில் வேலை துரிதமாக நடக்காமல் தாமதப்பட்டிருந்ததற்குக் காரணம் இதுதான். இந்தவிஷயத்தில் இவ்விதமாக நடக்கிறதென்று எங்களுக்கே ஒருவழியும் தோன்றாமற்போயிற்று. குண்டுக்கற்களும் பெரும்பாறைகளும் அலையின் உபத்திரவத்தால் ஸ்திரப்படாதவிடங்களில் அவைகளைக் கொட்டிக்கொட்டிப் பார்த்துவருந்தும்படி நேர்ந்தது. கடைசியில் அவ்வருத்தத்தைத் தீர்க்க ஒரு வழி யோசிக்கலாயிற்று. என்னவெனில், செங்குத்தான கரையென்றும், சாய்வான கரையென்றும் அணைக்கரை இரண்டுவிதமென முன்னமே மொழிந்திருக்கிறோமல்லவா? அவற்றுள் இச்சென்னையில் செங்குத்தான கரைகட்டச் சம்மதித்தது, அது மற்றொன்றைப் பார்க்கச் சுலபமான செலவில் செய்துமுடிக்கக் கூடியதாயிருப்பதனாலேயேயன்றி வேறல்ல. இவ்வளவு ஆழத்திற்குமேலேதான் அந்தக் கரை கட்டக்கூடுமென்று தெரியவரவே, கரைமுதல் அவ்வாழம்வரையில் மற்றொருவிதமான கரையேகட்டி, அந்தச் சாய்கரையைக் கொஞ்சம்கொஞ்சமாக நேராக்கிக்கொண்டுபோய்ச் செங்குத்தான கரையாக்குகிறதென்று தீர்மானிக்கப்பட்டது. சாய்வான கரைக்குவேண்டியதெல்லாம் அதிகமான குண்டுக்கற்களே. முன்சொல்லியபடி அந்தக் கற்களை எவ்வளவு விசாலமாகக் கொட்டினால் கடல் அதைச் சிறிதும் அசைக்காமலிருக்குமோ அவ்வளவு விசாலமாகக் கொட்டிச் சாய்வான கரைபோடவேண்டும்; தனித்தனி ஒவ்வொருபுறத்திலும் சுமார் 4000 அடி நீளமுள்ள அணைக்கரையில் முதலில் 1000 அடி நீளம்வரை சாய்வான கரை கட்டி அப்புறம் செங்குத்தான கரை கட்டவேண்டியதென்று தீர்மானிக்கலாயிற்று.

(இன்னும் வரும்.)

கபடவேஷதாரிகள்.

தோளிலிருந்து செவியைக் கடிப்பது பாம்பின் குணம். இத்தன்மையான சிறுவர்களுமுண்டு. அவர்கள் பார்வைக்குமட்டும் கம்பீரமானவர்களாயும், வலியவந்து நம்மோடு நட்பவர்களாயும் இருப்பார்கள். அவர்கள் பேசுவதெல்லாம் சிறிதுகாலமட்டுந்தான் நமக்கு இன்பந்தருவதுபோலிருக்கும். பின்பு அவர்கள் தங்கள் இயற்கையின்படியே பாம்பைப்போல வெடுக்கு வெடுக்கென்று எந்நேரம்பார்த்தாலும் பிடுங்கினவண்ணமாயிருப்பார்கள். அவர்களது தீக்குணங்களையெல்லாம் விரித்துரைக்கப்புகில் பெருகும். அவர்களுடைய குணங்களுள் ஒவ்வொன்றும் அருவருக்கத்தக்கதாகவேயிருக்கும். பொறாமையும் பொல்லாத குணமும் அவர்களிடத்தில் குடிகொண்டிருக்கும். இக்கெட்ட குணங்களின் அளவிற்கேற்றபடியே பொய்பேசுவதும், செய்நன்றி கோறலும், படுபகையும் மேலிட்டிருக்கும். இந்தப் பாதகர்களுக்குக் கபடமும், ஆணவமும் நிறைந்திருக்குமென்பதற்கு ஐயமேன்? இப்பெருங்குணங்களெல்லாம் ஒன்றுசேரப் பெற்றவர்களைத்தான் கபடவேஷதாரிகள் என்று சொல்வது.

"இக்கு விடந்தலையி லெய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லிலே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம்"

என்றபடி, பார்க்கும் இந்தத் துர்ச்சனனைக் கண்டமாத்திரத்தில், கை கால் நடுக்கமுற்று, மயிர்சிலிர்த்து, உள்ளங்கால்முதல் உச்சந்தலைமட்டும் உடம்பெல்லாம் எரிச்சலெடுத்து நமனைக்கண்டாற்போல் அஞ்சியோடும்படிக்கும், இவர்களைப்போலக் கொடியரென்று நாம் பெயரெடுக்கலாகாதென்றுந் தோற்றும்.

இக்குணங்களனைத்தும் பொருந்திக் குமதியெனப் பெயர் வாய்ந்த சிறுவனொருவன் ஓர் தர்மபாடசாலை மாணாக்கனாயிருந்தான். அந்தப் பாடசாலை மாணாக்கர்களெல்லாம் தங்கள் பெற்றோரைப் பிரிந்து அங்குதானே இருந்துகொண்டு ஒன்றாக உண்டுடுத்து வாழ்ந்து கல்விபயில்வது வழக்கம். குமதியோடு பழகாதவர்களுக்கெல்லாம் அவன் நற்குண நற்செய்கையுடையவனென்றே தோற்றும்; ஏனெனில், அவனைக் காண்கையில் அப்படித்தானிருக்கும். அவன் எல்லோரையும் வசிகரணம்பண்ணும்படி பார்ப்பதனால், கண்டவர்களெல்லாம் அவனை உத்தமனென்றெண்ணி அவனுக்குக்

தக்கவிதமாக உபசாரஞ்செய்ய விரும்புவார்கள். அவனும் அவர்களைக் கண்டவுடன், தானே எதிர்சென்று தோழமைபாராட்டுவான்.

குமதியின் குணமறியாமல், "வெளுத்ததெல்லாம் பால்" என்றிருந்த சுமதி என்போன் அவ்வஞ்சநெஞ்சனுடைய மாயவலையில் அகப்பட்டு, அவனைத் தனக்கு இன்னுயிர்த்தோழனாகக்கொண்டு, உண்டான ரகசியங்களையெல்லாம் அவனோடு சொல்லத் தலைப்பட்டான். தன் தோழனிடத்தில் வைத்திருந்த நம்பிக்கையினால் தன்னுடைய தங்கை இன்னானுக்கு வாழ்க்கைப்படப்போகிறாளென்பதையும், தன் தந்தை தனக்குத் தின்பண்டம் முதலியவற்றை வாங்கிக்கொள்ளும்படி இத்தனைபணம் செலவுக்குக் கொடுத்திருக்கிறாரென்பதையும், தன் அத்தைமகள்மேல் அதிக காதல் கொண்டு அவளைத் தான் மணம்புரிய நினைத்திருப்பதையும், தனது செவிலித்தாய் சிற்றுண்டியைப் புத்தகமூட்டையோடு ஒருவருக்குந் தெரியாமல் தான் தின்னும்படியாகக் கட்டிக்கொடுத்ததையும் ஒவ்வொன்றாய்ச் சொல்லிவிட்டான். சுமதியின் கருத்தை அறிந்த குமதி இந்த விஷயங்களைப்பற்றி நேர்ந்தபோதெல்லாம் அவனோடு இச்சகமாய்ப் பேசுவதினால், அது அவனுக்கு இன்பமாயிருந்தது. மறைகாவாவிடுதல் கொடும்பாவமென்றறியாமல், வஞ்சநெஞ்சனாகிய குமதி இவற்றை வெளியிட்டு, எல்லோராலும் அவனைப் பரிகாசப்படுத்தவேண்டுமென்ற கருத்துடன் மற்ற மாணாக்கர்களோடு சொல்லிப் பைரங்கப்படுத்திவிட்டான்.

இதைக்கேட்ட அந்தப் பாடசாலை மாணாக்கர்களெல்லாம் மறுநாள் காலையில் சுமதி படுத்துறங்கும் பள்ளியறைக்குள் அதிகாலையிற்சென்று, அவன் படுக்கையைச்சூழ்ந்து சிரிப்பும் விளையாட்டுமாய்க் கலகலவென்று கோலாகலமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். சுமதி அப்பொழுதுதான் நித்திரைதெளிந்து மெள்ளக் கண்ணைத் துடைத்துக்கொண்டு பள்ளியைவிட்டெழுந்திருக்கிற சமயம். அவ்வேளையில், எப்பொழுதும்போலிராமலும், பிள்ளைகள் தன்னைச் சூழநிற்பதையும், ஏதோ தாங்களே பேசிக்கொள்ளுகிற பாவனையாய்த் தன்னைப் பரிகாசஞ்செய்வதையுங் கண்டு கலங்கினான். அங்கிருந்தவர்களுள் விகடனென்பவன், கோலாகலனென்னும் மற்றொருவனைப்பார்த்து, கோலாகலா! உனக்குப் புத்தகங்களோடு தின்பண்டம் கட்டிக்கொடுக்கச் செவிலித்தாயிருந்தால் நன்றல்லவாவென்றான். இதைக் கேட்டவர்களெல்லாஞ் சிரித்து, சுமதியைப் பார்த்தவண்ணமாயிருந்தமையால், அவன் அது தன்னைப்பற்றியதுதானென்று கண்டான். கோலாகலன், ஆம், செவிலித்தாயிருந்தால் நலந்தான்; கலியாணஞ்செய்துகொள்ளும்படி காதல்கொண்டிருப்பவனுக்குச் சிற்றுண்டியின்மேல் அத்தனை விருப்பமிருக்குமோ என, விகடன், கோலாகலா! இதென்ன,

சிற்றுண்டி,' 'கலியாணம்' என்கிறாய்; யாரெனுங்கேட்டால் நகைக் ர்களா, சும்மாயிரு; எனக்கொரு தங்கையிருந்தால், அவளைக் கண்டபடி ஏழைக்குக் கொடுக்கும்படி உன்னைப்போலப் பார்த் திரேன்; வாமனா! உன்கருத்தும் இப்படித்தானல்லவாவென்று அரு கே நின்றவனைக் கேட்டான். அதுகேட்டுச் சுமதி, இதுவும் தன னைப்பற்றியதுதானென்றும், தான் அதற்கு முதனாள் இரவில், தன் தங்கை நெய்க்கடைக்காரனுக்கு வாழ்க்கைப்படப்போகிறாளென்று குமதியோடு சொன்னதை அவன் வெளிப்படுத்தியதனால் இப்படி எல்லாராலும் நிந்திக்கும்படியாயிற்றென்றும் தெரிந்துகொண்டான்.

சுமதி சொல்லிய ரகசியங்களையெல்லாம் குமதி வேணுமென்று வெளியிட்டதனால், அவை எங்கும் பறைசாற்றினாற்போலப் பரந்து, பின்பு பிள்ளைகளெல்லாம் நடுத்தெருவில் அவனைப் பரி காசம்பண்ணும்படியாயிற்று. பரமயோக்கியனாகிய குமதி இந்த மட்டோடுமிராமல், "குழந்தையைக் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுகிறது" என்றவண்ணமாய், ஒன்றுமறியாதவன்போலச் சுமதி யண்டைவந்து, அப்பா சுமதி! என்னடா செய்தி என்றான். சும திக்கு இதைக்கேட்கவே கோபம் பொங்கியெழுந்து அங்கம்ப தறிக் கண்சிவந்து பேச நாவெழாமல் நிற்க, குமதி, நண்பனே! உனக்கென்னநோய்? ஊரைவிட்டு வந்திருக்கின்றமையால், இந் நோய் நிலப்பேற்றினாலுண்டாயிற்றாவென்ன? அஞ்சாதே திடன் கொள்; வியாதிதீர்ந்து விரைவில் குணப்படுவாயென்றான். புண்ணி லே கோலையிடுவதுபோல இந்த வார்த்தைகளைக் கேட்கவே சுமதி பின்னும் அதிக கோபம் கொண்டவனாய், குமதி! நீ என்மேல் இப்படிக்கெல்லாம் கதைகட்டிவிட்டது உனக்கு நீதியோ என்றான். இந்தப் பூனையும் இத்தனை பாலைக்குடிக்குமோ என்ற வண்ண மாய்க் குமதி சுமதியைநோக்கி, தோழா! கதை கட்டுவதாவது, பாட்டிசைப்பதாவது, நீ சொல்வதின் பொருள் எனக்கு விளங்க வில்லை; நான் ஒரு பாவத்தையும் அறியேனேயென்றான். முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பவர்போலக் குமதிசொல்லு கிற ஸாகஸவார்த்தையைக் கேட்ட சுமதி, நல்லதிருக்கட்டும், நான் உன்னோடு ஏகாந்தமாய்க் காதோடுசொன்ன இச்செய்திக ளெல்லாம் நீ இவர்களோடு சொல்லாமல் பின்னை எப்படி இவ் வாறு வெளிப்பட்டன? நேற்று நான் சொன்ன சங்கதிகளையெல்லாம் அவர்களறிந்து இன்று காலையில் கொட்டமடித்ததை நீ நேர்நின்று பார்க்கவில்லையா? கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமோ? இவையனைத்தும் நீ சொல்லாமலா இவர்களுக்குத் தெரிந்தன என் றான். குமதி, ஓகோ! விகடனும் கோலாகலனும் இன்று காலையில் பள்ளியறையில் பேசிக்கொண்டதைக் கேட்டல்லவோ இப்படிக் கெல்லாம் பேசுகிறாய்? விகடன் பேச ஆரம்பிக்கவே எனக்கு அவன் மீதுண்டான கோபத்திற்களவில்லை; அந்தக் கோமாளி இப்படிக்

கெல்லாம் அறிவின்றிப் பிதற்றுவாரென்றறியாமல், நான் நேற்று இரவில் அவனோடு வேடிக்கையாய் வார்த்தைசொல்லிக்கொண்டிருக்கையில் நீ சொன்னதை நினைப்பின்றிச் சொல்லிவிட்டேன்; அது இப்படியா விபரீதமாயிற்று என்றான். துஷ்டனைக்கண்டால் தூர விலகவேண்டுமென்று நினைத்துச் சுமதி அவன் வாயிற் பின்னும் கோளிடவில்லை.

இவ்வாறு ஆரம்பத்திலேதானே குமதியின் சுபாவந்தெரிந்து, பின்பு நாளடைவில் முற்றும் வெளிப்பட்டது. அவனோடு யாரெனினும் முரணி அவன் செய்தகுற்றத்தை வெளியேவிட்டு அவனைக் குற்றவாளியாக்குவதாகப் பயங்காட்டினால், அவன் அவர்கள் மேல் தந்திரமாய்க் கோட்சொல்லி உபாத்தியாயனைக்கொண்டு தண்டிக்கும்படி செய்வான். எவனாவது படிக்கிறநேரத்தில் சற்றே சும்மா உட்காந்திருந்தால், அதை வகுப்பின் முதல்மாணாக்கன் காணும்படி ஏந்தவிதத்திலாவது செய்து அவன் கைப்புத்தகத்தைப் பிடுங்கிக்கொள்ளும்படி செய்வான்; யாராவது தன் தோழனோடு வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்தால், அந்த அறையின் கதவண்டை நின்று குமதி ஒட்டுக்கேட்டுக்கொண்டிருப்பான்; பாடசாலைப் பிள்ளைகள் ஒருவருக்குந்தெரியாதபடி தின்பண்டங்களை வாங்கித் தின்றுகொண்டிருந்தால் அதையறிந்து உபாத்தியாயனை அவ்விடம் அழைத்துவந்து காட்டிக்கொடுத்துத் தெருவிலிழுத்துவிடுவான்; அவனுக்குத் தெரியாதது அங்கொன்றுமிராது. நாரதர் போலக் கலகப்பிரியனாய்க் குமதி எந்நேரமும் கோட்சொல்லிக் கொண்டு திரிவான்.

குமதியைப்போலத் தீயவனை எங்குங் காண்பதரிது. அவனோடென்ன வாதமென்று யாராவது இரக்கமுற்று மீண்டும் அன்பாயிருந்தால், அவன் இந்தமட்டும் வாய்த்ததேயென்று முன் நினைத்திருந்தபடியே பழிவாங்கவேண்டுமென்கிற கருத்துடன் அதிக சிநேகம்போல இச்சகம்பேசிச் சமயம்பார்த்திருப்பான். "புலி பதுங்குவதெல்லாம் பாய்ச்சலுக்கடையாளம்" என்ற ரீதியாய் அவன் செய்வதனைத்தும் பாசாங்கே; மோர்ந்துகொள்ளுகிறவன் போலிருந்து கடிப்பான். காட்டுத்தீயினால் வெந்து நீறுவதற்கிருந்த பாம்பை, அவ்வழியாகச் சென்ற வேடன் புதரினின்றும் எடுத்து உயிர்காத்த உபகாரத்தை அது எண்ணாமல் அவனைக் கடிக்கப் போய் அவனால் தலைநசுங்கி இறந்துபோனது முற்றும் குமதிக்குப் பொருந்தும். நல்லோர்க்கு எந்நாளும் நன்மையுண்டாகும்; ஏதேனுங் குறைநேரிடினும் எளிதில் நீங்கும்; தீயோர்க்கு ஒருநாளும் நன்மையில்லை; தீயோர் என்றிருந்தாலும் துன்புறுவார்.

சிலர் எப்போதும் பிறர்மேல் பழிசொல்வதையே தொழிலாகக் கொண்டிருப்பதுமுண்டு. இப்படிச் சொல்லாவிடில் அவர்களுக்குத் தூக்கமும் வராது. நாவின் தினவடங்கப் பிறர்மேல் இன்னு

கூறுக்கால் அவர்களுக்குப் பொழுதுபோகாது. பலவகையான நோய்களைப்போலவே, பொய்பேசுவதும், குறளைசொல்வதும் சிலருக்கு இயற்கையாகவே நோய்களாகிவிடுகின்றன; இதுவிஷயத்தில் இதைத் தவிர்த்து வேறொன்றும் நல்லகாரணமாகத் தோற்றவில்லை. சிலர் அயல்வாழப்பொறுமல் இப்படிக்காவதுமுண்டு; பேடித்தனமும் பொறாமையும் கபடவேஷதாரிகளின் பெருங்குணங்கள்; அதனாலேதான் இவர்கள் தாமே நேர்நின்று செய்யாமல், பின்னேநின்று மற்றவர்களை ஏவிவிட்டுத் தங்கள் மனோரதத்தை நிறைவேற்றுவார்கள். இவ்வாறாக வஞ்சகர், துரோகி முதலியவர்கள் இவ்வுலகமுண்டானகாலமுதல் தீங்கிழைத்துக்கொண்டுவருவது இயற்கையேயன்றிப் புதிதல்ல. ஆயினும் ஸகவாசதோஷமே இக்கேட்டிற்கெல்லாம் மூலமென்பது நிச்சயம். ஆதலால், யாரும் தங்கள் மக்கள் தீயோருடன் சேராதிருக்கும்படி கருத்தாய்ப் பாதுகாத்துவந்தால் இப்படியாகார்கள். எந்த நோய்க்கும் மருந்திருப்பதுபோல இந்நோய்க்கும் மருந்துண்டு:— ஒருவன் நியாயமாயும், தைரியமாயும், அன்பாயுமிருந்து, எப்பொழுதும் எந்தவிஷயத்திலும் மனப்பூர்வமாய் நடந்துவந்தால் அவன் தீயோனாகான். நடுவுநிலைமை தவறிநடவாமையே மேலான தருமம்.

"கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்சு
நடுவொரீஇ யல்ல செயின்."

பொன்னும் பொன்கனிகளும்.

சகலமான உலோகங்களுள்ளும் பொன்னே முதலில் கண்டுபிடிக்கப்பட்ட உலோகமெனக் காணகிறது. இவ்வுலகத்தில் சிறிதளவாயினும் பொன்னே அகப்படாத தேசம் ஒன்றுமில்லை. பொன் அதிக பளபளப்பாயிருப்பதனாலே அது மிக விரும்பத்தக்கதாயிருக்கின்றது. இரும்பு எங்கும் விசேஷமாய்க் கிடைக்கின்ற உலோகமாயினும், பொன் கண்டுபிடித்தபின் நெடுநாள்வரையிலும் இரும்பின் சொரூபம் ஒருவர்க்கும் தெரியாமலேயிருந்தது. இரும்பு இயற்கையில் வேறு சில பொருள்களோடு கலந்திருப்பதால், அப்பொழுது அதைப் பார்த்தால், சாதாரணமான கல்போலவே காணப்படும். மிகவும் உக்கிரமான தீயும் உழைப்பும் இருந்தாலல்லது இரும்பை அதனோடு கலந்திருக்கும் களிம்புமண்ணைவிட்டுப் பிரித்தெடுப்பது கூடாது. பொன்னோ அப்படிப்பட்டதன்று; அநேகமாய் அது சுபாவத்திலேயே சுத்தமாயிருக்கும். இரும்பைப்போல் அல்லாமல் பொன் அதிக துரிதத்தில் உருகும்.

பொன் மஞ்சள்நிறமானது; எறக்குறைய அது ஈயத்தைப் போல் அத்தனை நயமுள்ளது. பொன் எல்லாவற்றிலும் அதிக பளுவான லோகமாயினும், அதைப்போல மிகவும் மெல்லியதாய் அடித்து நீட்டத்தக்க லோகம் வேறொன்றுமில்லை. இரண்டுலக்ஷம் தகடுசேர்த்தாலும் ஒரு அங்குலம் கனத்துக்கு அதிகப்படாமல் அத்தனை மெல்லிய தகடுகளாகப் பொன்னை அடிக்கலாம். ஒரு குன்றுமணி எடையுள்ள பொன்னை 500 அடி நீளம் கம்பியிழுக்கலாம். வெயில் காற்றுகளிலாயினும் தண்ணீரிலாயினும் இரும்பையாவது செம்பையாவது போட்டுவைத்தால் அவை நாளளவிலே துருப் பிடிக்கும்; பொன் ஒருபோதும் தன் இயற்கை மாறாது. இரண்டொருவகைக் கொடிய திராவகங்களைச் சேர்த்தாலன்றிப் பொன்னை அழிக்கக்கூடாது.

பூர்வகாலத்தொடங்கிப் பொன் ஆபரணங்களாகவும், பண்டமாற்றலுக்குரிய மத்தியஸ்தமான விலைப்பொருளாகவும் உபயோகிக்கப்படுகின்றது. முதலில் பொன்னை நிறுத்தே விற்றுக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அதை வாங்குபவர்கள் வாங்குகிற பொன் சுத்தமா அல்லவா என்பதைப் பரீக்ஷித்தறியவேண்டியதாயிருந்தது. பின்பு சிலகாலம் கழித்துப் பொன் ஒரேநிலையான விலைமதிப்புள்ள நாணயங்களாகச் செய்யப்பட்டது. இத்தனையென்று அந்த நாணயங்களை எண்ணிக்கொள்ளவேண்டுவதொன்றேயொழிய மற்றப்படி அவற்றில் குணதோஷம் ஒன்றும் பார்க்கவேண்டுவதில்லை. இப்பொழுது வழங்குகிற பிரித்தானியருடைய பொன்நாணயங்களில் பதினொருபங்கு பொன்னும் ஒருபங்கு செம்பும் கலந்திருக்கின்றன. சுத்தமான பொன் சீக்கிரம் தேய்ந்துபோகுமாதலால், நாணயம் கெட்டியாயிருக்கவேண்டுமென்று அதற்காகவே அதில் செம்பு கலக்கப்படுகின்றது. பொன்நாணயங்களில் செம்பைக் கலப்பதனால் துரைத்தனத்தார்க்கு லாபம் ஒன்றுமில்லை. ஏனெனில், அந்த நாணயத்தில் சேர்த்திருக்கிற பொன்னின் அளவைமாத்திரம்கொண்டு அதற்கு விலை ஏற்படுத்தியிருக்கிறதேயன்றிச் செம்பையும் சேர்த்தன்று. செம்பையாவது வெள்ளியையாவது பொன்னோடு வெவ்வேறு அளவாய்க் கலந்தால், அதற்குத்தக்கபடி பொன்னின் நிறம் வேறுபடும்.

பொன் தண்ணீரைப்போலப் பத்தொன்பதுபங்கு பளுவானது. செம்போ ஒன்பதுபங்குக்கு அதிகமில்லை. அதனால், செம்புகலந்த பொன் கட்டி ஒன்று இருக்குமானால், அதனெடையையும் பரிமாணத்தையும் பார்த்து, அதில் பொன் இவ்வளவென்றும், செம்பு இவ்வளவு கலந்திருக்கிறதென்றும் நாம் கண்டறிந்துகொள்ளலாம். இதைப்பற்றிப் பூர்வகாலத்தில் சுமார் 2000 வருஷங்களுக்குமுன்னே பிரசித்தமாய் நடந்ததாகச் சொல்லுகிற கதை ஒன்றுண்டு. என்னவெனில், ஹீரோ என்ற ஒரு அரசன் சுத்தமான சுவர்ணத்

தால் கிரீடமொன்று செய்வித்தான். ஆயினும் தட்டான் அதில் வெள்ளிகலந்திருக்கிறானென்று அவ்வரசனுக்கு எப்படியோ சந்தேகமுண்டாயிற்று; அதைக் கண்டுபிடித்துச் சொல்ல அவனுக்கு வழிமட்டும் யாதொன்றும் தெரியவில்லை. அதனால் அவ்வரசன் அந்த விஷயத்தை ஆர்க்கிமெதீஸ் என்னும் ஒரு கணிதசாஸ்திர பண்டிதருக்கு அறிவித்தான். அந்த வித்வான் அதைப்பற்றி ஆலோசித்துக்கொண்டேயிருக்கையில், ஒருநாள் ஸ்நானம்பண்ணும்பொழுது இந்த நுட்பத்தைக் கண்டுபிடிக்கிறவழி ஒன்று அவர் புத்தியில் தோன்றியது. அதைக் கண்டுபிடித்த சந்தோஷத்தால் அந்தக்ஷணமே அவர் "நான் அதைக் கண்டுபிடித்தேன்! நான் அதைக் கண்டுபிடித்தேன்!" என்று கூவிக்கொண்டு அப்படியே நிர்வாணமாக எழுந்து ஓடினார் என்கிறார்கள். அவர் வீட்டுக்குப் போனவுடனே, சிறிதும் கலப்பில்லாத பொன்னென்று தனக்கு நன்றாய்த் தெரிந்த ஒரு பொன்கட்டியை எடுத்துத் தண்ணீர்க்குள் நிறுத்துப்பார்த்தார்; வெளியே நிறுக்கும்போது அது என்ன எடையிருந்ததோ, அந்த எடையிலே பத்தொன்பதில் ஒருபங்கு தண்ணீருக்குள்ளே நிறுக்கையில் குறைவுபட்டிருந்தது. அதைக் கண்டு அவர், நாம் மேலே சொல்லியபடி, சுத்தமான பொன் தண்ணீரைப்போலப் பத்தொன்பதுபங்கு பளுவானதெனக் கண்டுகொண்டு, அரசனிடம் சென்று அந்தக் கிரீடத்தையும் அப்படியே தண்ணீரில் நிறுத்துப்பார்த்தார். அதன் எடை பத்தொன்பதில் ஒரு பங்குக்கு அதிகம் குறைவுபட்டது. அதனால் அந்தக் கிரீடத்தில் தட்டான் பொடிகலந்திருப்பது வாஸ்தவமே என நிச்சயித்து அந்தத் திருட்டுக்காக அவனைத் தண்டிக்கவேண்டியதுதான் என்றார்.

பொன்னை மிகவும் மெல்லிய ரேக்குகளாய் அடித்துப் படங்களின் சட்டம்முதலியவைகளுக்குப் பொன்னிறம்கொடுக்க உபயோகிப்பார்கள்; திராவகங்களைக்கொண்டு பொன்னை நீராக உருக்கி வேறுலோகங்களுக்கும் பொன்பூச்சுப் பூசுவார்கள்.

கொஞ்சமோ அதிகமோ பொன் இந்தப் பூலோகத்தின் எந்தப்புறத்திலும் அகப்படும். இத்தேசத்தில் சில ஆறுகளின் மணல்களில் சிற்சிலவாய்ப் பொன் அகப்படுகின்றது. மேற்கு மலைத்தொடர் என்னப்பட்ட ஸகியபர்வதத்தின் சாரல்களில் சிலவிடங்களிலே நெடுநாளாகப் பொன் வெட்டியெடுத்து வந்தார்கள். ஆயினும் அதற்கேற்ற யந்திரங்கள் இல்லாததுபற்றிக் கனிகள் அதிக ஆழமாக வெட்டப்படவில்லை. அதனால் மனிதர் கையுழைப்பால் வெட்டியெடுத்த பொன் உழைப்பின் கூலிக்கே கட்டிவாராமற்போயிற்று. அப்படி பொன் வெட்டியெடுப்பதைப்பார்க்கப் பயிர்த்தொழில் செய்வதனால் ஒருவன் அதிகம் சம்பாதிக்கக்கூடும். அதனால் அந்த வியாபாரம் நிறுத்தப்பட்டது. இப்போது சிலநாளைக்குமுன்னே நீராவியந்திரம்முதலிய சில கருவிகளைக்கொண்டு இவ்

விந்தியாவில் பொன்வெட்டியெடுத்து லாபம் சம்பாதிக்கலாமென்று கண்டறிந்து, அதற்காக லந்தன்நகரத்தில் சுமார் பதினாறு சங்கத்தார் சேர்ந்து இரண்டுகோடிரூபாய் மூலதனம் சேர்த்துக்கொண்டு, மறுபடியும் இத்தேசத்தில் பொன்வெட்டி எடுக்கவேண்டிய யந்திரங்களையும், மிகச் சமர்த்தர்களான சுரங்கமறுப்பவர்களையும் அனுப்பியிருக்கிறார்கள். உதகமண்டலம், மைசூர் இவற்றிற்கு அருகாமையில் முன்னே சிறிதும் விலைபெறுமலிருந்த நிலங்கள் மிகவும் உயர்ந்த விலைக்கு அவர்களுக்கு விற்கப்பட்டன.

இவ்வாசியாகண்டத்தின் வடக்கிலுள்ள சைபீரியாதேசத்தில் அதிகமாகப் பொன் அகப்படுகின்றது. ஆசியாகண்டத்தில் மற்றொன்றும் அவ்வளவில்லை. அங்கே வருஷத்தில் மூன்றுகோடி ரூபாய் விலைமதிப்புள்ள பொன் அகப்படுகின்றது. அதனோடு ஒத்துப்பார்க்கையில் ஐரோப்பாவில் பொன் அகப்படுவது மிகவும் சொற்பமென்றே சொல்லவேண்டும். ஐரோப்பாவுக்குள் ஆஸ்திரியாதேசத்துப் பொன்கனிகள் மிகச் சிறந்தவையென்று பெயர். அங்கே வருஷத்தில் இருபதுலக்ஷம் ரூபாய் பொன்தான் அகப்படுகின்றது. ஆப்பிரிக்காகண்டத்திலும் இப்போது பொன் சொற்பமாய்த்தானிருக்கிறது. ஆயினும் அங்கே வரவர விருத்தியாகுமென்று எதிர்பார்த்திருக்கிறார்கள்.

1847-வருத்தில் உத்தர அமெரிக்காவின் மேலண்டைக் கரையோரத்திலுள்ள காலிபோர்னியா தேசத்திலே சிறந்த பொன்கனி கண்டுபிடிக்கப்பட்டது; சாக்கிரமெந்தோ என்னும் ஆற்றின் அடியில் பொன் சகலங்கள் இருக்கக் காணப்பட்டன. இந்தச் செய்தி சீக்கிரமே சன் பிரான்விஸ்கோ என்னும் பட்டணத்திற்குத் தெரியவர, உடனே அப்பட்டணத்தாரெல்லாம் பொன்கண்டெடுக்கப் போஆவல்கொண்டு தாங்கள் செய்துவந்த வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு ஓடினார்கள். அங்கே வெகுதூரத்துக்கு வெகுதூரம் பொன் விசேஷமாய்ப் பரந்திருப்பதாகச் சீக்கிரமே தெரியவரவே, அமெரிக்காவிலுள்ள பல தேசங்களிலிருந்தும் அநேகர் அவ்விடத்துக்குப் போனார்கள். கடைசியில் அச்செய்திகேட்டு ஐரோப்பியரும் அநேகர் அவ்விடம் தேடிச் சென்றார்கள். அவ்விடத்தில் வருஷத்துக்கு 13,00,00,000 ரூபாய்க்குக் குறையாமல் பல வருஷங்கள்வரையில் பொன் அகப்பட்டுக்கொண்டுவந்தது. ஆயினும் பின்பு சில வருஷங்களில் அது வரவரக் குறைந்து அந்தத் தொகையில் பாதிக்கு வந்துவிட்டது.

1851-வருத்தில் ஆஸ்திரேலியாதேசத்தில் சிறந்த பொன்கனிகள் இருக்கக்கண்டு உலகத்தாரெல்லாம் அதனிடத்தில் அதிக ஆவல்கொண்டார்கள். அங்கே பலதேசங்களிலும் பலவிதமாய்ப் பொன் அகப்பட்டதாயினும், அங்குள்ள விக்டோரியா தேசத்திலேதான் விசேஷமாய்க் கண்டெடுக்கப்பட்டது.

பொன் சாதாரணமாய்ச் சிறிதுசிறிதாகவே அகப்படும். ஆயினும் சிலவிடங்களில் 100 சேர் எடையும், ஒரு முழம் நீளமும் உள்ள கட்டிகளாகவும் அகப்படுகின்றது. அந்தக் கட்டிகள் ஒவ்வொன்றின் விலையே லக்ஷம் ரூபாயாகும்.

பொன் எடுக்கிற வழி இரண்டு உண்டு. தரைமேல் உள்ள மண்களையெடுத்து அரித்துத் தேடியெடுப்பதுமுண்டு; கனிகளுக்குள் வெட்டியெடுப்பதுமுண்டு.

ஆதியில் தரைமேலிருந்த மண்களையே சேர்த்து அரித்துப் பொன் கண்டுபிடித்துவந்தார்கள். அதெப்படியெனில், ஒரு பெரிய சாலில் மண்ணைவாரிப்போட்டு அதன்மேல் நிரம்பத் தண்ணீர் வார்த்து அந்த மண்ணை அதில் நன்றாய்க் கரைத்து மேலோடு நீரைக் கீழே ஊற்றிவிட்டால், அதிக பளுவான பொன்துண்டுகள் அதன் அடியில் தங்கிப்போம். இப்படியே ஒருவன் ஒரு சால் மண்ணில் 12,000 ரூபாய் விலையுள்ள பொன் கண்டெடுத்தான். அது கண்டு அநேகர் தாமும் அவ்வண்ணமே கண்டெடுக்கலாமென்று முயன்றார்கள். பூமியில் பலவிடங்களிலும் பொன்மண்களைக் கும்பல்கும்பலாய்ச் சேர்த்துக் குவிக்கப் புகுந்தார்கள்.

பூர்வகாலத்தில் அகப்பட்ட பொன் பூமிகளில் இப்பொழுது மேல்மண்ணில் அத்தனையாய்ப் பலன்கிடைக்கவில்லை. கனிகளில் வெகு ஆழத்திற்குக் கீழேதான் சிறந்த பொன் அகப்படுகின்றது. அங்கிருந்து வெட்டியெடுத்த பொன்கலந்த கல்லுகளை மேலே கொண்டுவந்து நன்றாய்ப் பொடியாக்கித் தண்ணீரைவார்த்து அரித்தால், கற்களெல்லாம் அலைசுண்டுபோகப் பொன் அடியிலே தங்கிப்போம். 1878-ஆம் வருஷத்தில் விக்டோரியாநாட்டில் 36,636பேர் பொன்கனி வெட்டுகிற வேலையில் அமர்ந்தார்கள். அந்த வருஷத்தில் 1290 சதுரமைல் பொன்பூமி வெட்டியெடுக்கப்பட்டது. சில கனிகள் 2000 அடி ஆழத்தின் கீழேயும் இருந்தன. அப்பொழுது அதற்காக மிக்க வலிவுள்ள 1036 நீராவியந்திரங்கள் உபயோகிக்கப்பட்டன; அகப்பட்ட பொன்னும் சுமார் நான்கு கோடி ரூபாய் விலை தாளும்.

மற்ற லோகங்களைப்பார்க்கப் பொன்னுக்கு விலை மிகவும் அதிகமாய் இருப்பதெல்லாம் அதன் அருமையாலும் அழகினாலுமே. பொன் செம்பைப்போல் அத்தனை ஏராளமாயிருக்குமாயின், செம்பைப்பார்க்க அதற்கு அதிக விலையிராது. பொன்னின் பெருமைக்கு அதன் அழகும் ஒரு காரணந்தான். மிகவும் அருமையாயினும் அழகும் உபயோகமும் இல்லாமையால் உலகில் ஒருவரும் வேண்டுவாரில்லாத பொருள் எத்தனையோ இருக்கின்றனவல்லவா?

விடுகதைகள்.

1. எப்போதும் ஒரே வழியில் தப்பாமல் போய்வந்துகொண்டிருப்பது எது?

2. ஒரு கணவாயின்மேல் செங்குத்தான பருவதமொன்று இருக்கிறது; அதென்ன பருவதம்?

3. பெரிய பருவதங்களின் உச்சியிலிருந்து தானே கீழேவிழும், ஆயினும் சிறிதும் உருக்குலையாது. அதென்ன?

4. பத்து மரங்கள் உண்டு. ஒவ்வொரு மரத்தின் உச்சியிலும் தட்டையான பத்துப் பாறைகளிருக்கின்றன. அம்மரங்கள் எவை?

5. தரையிலும் நடப்பதில்லை, ஆகாயத்திலும் பறப்பதில்லை, தண்ணீரிலும் நீந்துவதில்லை; ஆயினும் அது நடக்கும், உயர ஏறும், கீழே இறங்கும். அதென்ன?

6. எனக்கு முகமுமுண்டு கைகளுமுண்டு, உங்கள் கண்முன்னேயே நான் அசைந்து நடப்பேன்; நான் அசைந்தாலும் என்னுடல் அசையாமல் நிற்கிறது; நான் அசையாமல் நிற்கையில் நான் தூங்குகிறேன். நான் யார்?

7. நான் எவர்க்கும் அடிமைப்பட்டு வேலைசெய்யவேண்டும்; நான் அடிமையாயிருக்கிறவரையில் அடியார்க்கடியனாய் உழைப்பேன்; நானே அரசனானால் அப்போது எல்லாவற்றையும் என் ஆட்சியுள் அடக்கிக்கொள்வேன். நான் யார்?

8. நெடுநாளைக்குமுன்னமே அமைத்ததென்றாலும் அன்றன்றைக்கே அமைக்கப்படுகின்றது; யாவரும் தூங்குகையில் அது வேலைசெய்கின்றது; அதை வேண்டாதவர் ஒருவருமில்லை. அதென்ன?

சென்ற சஞ்சிகையிலுள்ள விடுகதைகளுக்கு விடை.

1. ஓசை.
2. பாம்பு.
3. சொக்காய்.
4. ஒருவருஷம். (அதன் மாதங்களும் நாள்களும் கிளைகளாகவும் இலைகளாகவும் கூறப்பட்டன.)
5. காற்றாடி.
6. குடை.
7. உழுகிற குண்டைகளோடு கூடிய உழவன்.
8. கிலுக்கண்ணாடி.

சிறுவர்க்கான கதை.

(இருப்புமனிதன்.)

பூர்வகாலத்திலே வசந்தபுரம் என்னும் பட்டணத்தில் வசந்தராஜனென்னும் அரசன் அரசாண்டுவந்தான். அப்பட்டணத்தைச் சுற்றி ஆகாயமளாவிய மரங்களும் செடிகளுமடர்ந்த பெருங்காடொன்று இருந்தது. அடிக்கடி அந்தக் காட்டுக்குப் போய் வேட்டையாடுவதே அவ்வரசனுக்கு அதிக ஆநந்தமாயிருந்தது. ஒருநாள் அவ்வரசனுடைய வேட்டையாட்களுள் ஒருவன் அவ்வனத்திற்கு வேட்டையாடப்போனான்; மாலையில் அவன் வழக்கப்படி திரும்பி வீடுவந்து சேரவில்லை. அதுகண்டு அரசன் இதென்னவென்று அவனைத் தேடிவரும்படி மறுநாள்காலையில் வேறிரண்டு வேட்டையாட்களை அனுப்பினான்; அவர்களும் அன்று சாயந்தரம் திரும்பிவரவில்லை. அதுதெரிந்து அரசன் கொஞ்சம் அச்சங்கொண்டு, அந்தப் பெருங்காடு முழுதும் தேடி அவர்களை எப்படியாவது கண்டுபிடித்துவரும்படி மற்றுமுள்ள தன் வேட்டைக்காரர்கள் அனைவரையும் அனுப்பினான். அவர்கள் அப்பட்டணம் விட்டுப் போனதுதான் தெரியும். பின்பு அவர்கள் ஒருபோதும் திரும்பிவரவேயில்லை; அவர்களைப்பற்றி யாதொரு செய்தியும் தெரியவில்லை; பட்டணத்திலிருந்துபோன வேட்டைநாய்கள்கூட ஒன்றும் திரும்பிவரவில்லை. இப்படி மூன்றுதரமும் ஒரேமாதிரியாய்ப் போனவர் ஒருவரும் திரும்பிவாராமற்போகவே, அக்காட்டில் ஏதோ ஒரு கெடுதியிருக்கிறதென்று அரசன், இனி அக்காட்டினுள் எவரும் புகக்கூடாதென்று கட்டளையிட்டான்.

அன்றுமுதல் அக்காட்டில் ஒரு மனிதப்பூண்டுகூடப் பிரவேசிக்கவில்லை; அக்காட்டிலிருந்து ஆந்தைகளும் கோட்டான்களும் கூவுவதுமட்டும் கேட்குமேயொழிய மற்றப்படி ஒன்றும் கேளாது. இப்படியாக அப்பெருங்காடு மனிதசஞ்சாரத்துக்குச் சிறிதும் யோக்கியமாகாத கொடியவிடமாயிருந்தது. இப்படியிருக்க ஒருநாள் யாரோ ஒரு வேட்டைக்காரன் அவ்வரசனுடைய சமுகத்திற்குவந்து அந்தக் கொடிய காட்டிலேபோய் வேட்டையாடிவரத் தனக்கு உத்தரவுகொடுக்கும்படி வேண்டினான். அதுகேட்டு அரசன், வேண்டாம், இதுவரை அக்காட்டுக்குள் சென்று திரும்பிவந்தவர் ஒருவருமில்லை; போனால் உனக்கும் அதேகதிதான் நேரிடும். அக்காட்டைநினைக்க எனக்குப் பயமாயிருக்கிறது; வீணேபோய்ப் பிராணனை இழக்கவேண்டாம் என்றுசொல்ல, அவ்வேட்டைக்காரன், எனக்கு அதினிடத்தில் ஒரு பயமும் தோன்றவில்லை; அப்படியின்றி ஏதாவது ஒரு அபாயம் நேர்ந்தாலும் நான் தப்பித்துக்

கொண்டு வரமாட்டுவேன் என்று சொல்லிச் செலவுகொடுக்க வேண்டினான்.

உனக்குப் போகத் தைரியமிருந்தால் போய்வா என்று அரசன் சொல்லக்கேட்டு அந்த வேடன் தன் வேட்டைநாயோடுகூட அவ்வனத்துள் பிரவேசித்தான். சிறிதுதூரம் போகையில் அங்கொரு காட்டுமிருகம் தென்பட்டது. வேட்டைநாய் அதைக் கண்டு துரத்திக்கொண்டு ஓடிற்று. ஆயினும் சிறிதுதூரம் போகையில் அந்த வேட்டைநாய் அங்கிருந்த ஒரு தடாகத்தில் விழுந்தது. விழுந்தவுடனே அந்தத் தடாகத்தினின்றும் ஒரு கை வெளித்தோன்றி அந்த நாயைத் தண்ணீருக்குள் இழுத்துக்கொண்டு போய்விட்டது. இவ்வதிசயத்தைக் கண்டவுடனே அந்த வேடன் அங்கு நிற்காமல் திரும்பிவந்து, அந்தக் குட்டையின் தண்ணீரையெல்லாம் இறைத்து அதன் அடியில் உள்ளதைக் கண்டறியும்படி சாலும் கையுமாய் மூன்றுபேரை அழைத்துக்கொண்டுபோனான். அப்படியே அவர்கள் அதிசீக்கிரத்தில் அக்குட்டைத் தண்ணீரையெல்லாம் இறைத்துவிட்டு அதனடியிலே போய்ப் பார்க்க, அங்கே துருப்பிடித்த இரும்புபோன்ற உடலும், முழங்கால்வரையில் வந்துதொங்குகிற சடைத்தலையுமாய் ஒருவன் இருக்கக்கண்டார்கள். கண்டவுடனே அவர்கள் அவனைக் கயிறுகொண்டு நன்ருய்க் கட்டி இழுத்துக்கொண்டுபோய் அரசன் சமுகத்தில் விட்டு நடந்த வரலாற்றையும் சொன்னார்கள். அதைக் கேட்டவுடனே அரசன் இக்காட்டிலுள்ள திருடன் இவன்தானெனத் தெரிந்து, பெரிய இருப்புக்கூடொன்று செய்வித்து அதற்குள் அவனைச் சிறைசெய்துவிட்டான். பின்பு அதன் திறவுகோலை ராணிவசம் ஒப்புவித்து, என் உத்தரவு இல்லாமல் இதை எவரும் திறக்கக்கூடாது; அப்படி எவராவது திறப்பாரானால் அவரை உடனே சிரச்சேதம் செய்துவிடுவேனெனக் கட்டளையிட்டான். அன்று முதல் அந்தக் காட்டினுள் யாவரும் யதேச்சையாய்ப் போய் விளையாடிக்கொண்டிருந்தார்கள், எவருக்கும் எவ்விதமான அபாயமும் உண்டாகவில்லை.

அந்த ராஜாவுக்கு ஒரு குமாரனுண்டு. அவனுக்கு அப்பொழுது எட்டுவயது. அவன் ஒருநாள் ராஜசபையில் பந்தடித்து விளையாடிக்கொண்டிருந்தான். விளையாடுகையில் அவன் அடித்த பந்து அங்கிருந்த இருப்புக்கூட்டினுள்ளே போய் விழுந்தது. அதைப் பார்த்து ராஜகுமாரன் அந்தக் கூட்டண்டையோடி அதை எடுத்துக்கொடுக்கும்படி அதனுள் காவல்செய்யப்பட்டிருப்பவனைக் கேட்க, அவன் இதன் கதவைத் திறந்தாலல்லது நான் உன் பந்தை எடுத்துத்தரமாட்டேனென்றான். அதற்கு ராஜகுமாரன், இதன் கதவை எவரும் திறக்கக்கூடாதென்று என் தந்தை நிர்ப்பந்தம் செய்திருக்கிறார்; ஆதலால் நான் இதைத் திறக்கமாட்டே

னென்று சொல்லிவிட்டு ஓடிப்போனான். திரும்பியும் மறுநாள் காலையில் ராஜகுமாரன் அவ்விடத்திற்குவந்து தன் பந்தைக் கொடுக்கும்படி கேட்க, அப்போதும் அந்தக் காட்டுமனிதன், இந்தக் கூட்டின் கதவைத் திறந்தால்தான் கொடுப்பேன் என்றான். அதுகேட்டு அச்சிறுவன் நான் அதைத் திறக்கக்கூடாதென்று சொல்லிவிட்டுப் போயினான்.

மூன்றுநாள் காலையில் அரசன் வேட்டையாடப் போய்விட்டான். அன்றையதினமும் அச்சிறுவன் அந்தச் சிறைப்பட்ட காட்டுமனிதனிடம் சென்று தன் பொற்பந்தைக் கொடுக்கும்படி வேண்ட, இதன் கதவைத் திறந்தாலன்றி நான் இந்தப் பந்தைத் தருவதில்லையென்று அவன் ஒரே பிடிவாதமாய்ச் சொல்லக்கேட்டு ராஜகுமாரன், உம்மிஷ்டப்படியே கதவைத் திறப்போமென்றாலும் இதன் திறவுகோல் என்னிடத்திலில்லையே! நான் என்ன செய்வேனென, அவன், திறவுகோல் உன் தாயாருடைய தலையணையின்கீழ் இருக்கின்றது; உனக்கு இஷ்டமிருந்தால் எடுத்துக்கொண்டுவந்து திறக்கலாமென்றான். அதைக் கேட்டவுடனே அச்சிறுவன் தன் பந்தைப் பெறுவதிலிருந்த பேராவலால் மற்றவை ஒன்றையும் நினையாமல், உடனே சென்று திறவுகோலைக் கொண்டுவந்து, அந்தக் கூண்டின் பூட்டு தன் கைக்கு எட்டாத உயரத்திலிருந்தும் எழும்பிக் குதித்துப் பூட்டைத் திறந்தான். அதனுள் இருந்த காட்டுமனிதன் உடனே கதவைத் திறந்துகொண்டு வெளியேவந்து பொற்பந்தை அச்சிறுவன் கையில் கொடுத்துவிட்டுத் துரிதமாய்ச் சென்றான். அதுகண்டு ராஜகுமாரன் அச்சங்கொண்டு, ஐயா, போகாதேயுங்கள், போகாதேயுங்கள்! நீங்கள் போய்விட்டால் என்னை அடித்துக் கொன்றுவிடுவார்களென்று கூவினான். அதுகேட்டு அந்தக் காட்டுமனிதன் சரேலென்று திரும்பிவந்து அச்சிறுவனையும் தூக்கித் தோளிலே போட்டுக்கொண்டு கடுநடையாக நடந்து காட்டுக்குப் போய்விட்டான்.

வேட்டையாடப்போன அரசன் திரும்பிவந்தவுடனே இருப்புக்கூடு சூனியமாயிருப்பதுகண்டு இதென்ன செய்தியென்று பெண்சாதியைக் கேட்டான். அவளும் நடந்தது இன்னதென்று தெரியாமல் தன் மகனைக் கூவினாள். மகன் அங்கிருந்தாலல்லவோ அதைக்கேட்டு வரப்போகிறான்! அவள் கூவினதற்கு ஒருவரும் ஏனென்று பதில் உரைக்கவில்லை. பின்பு அம்மகனைத் தேடிப் பார்க்கும்படி அரசன் நாற்புறமும் சேவகர்களை அனுப்பினான். அவர்களும் எங்கும் தேடிப்பார்த்து அவனைக் காணாமலே திரும்பிவந்து சேர்ந்தார்கள். அதுகண்டு அரசன் நடந்தசெய்தியை ஊகித்தறிந்துகொண்டு மிகவும் விசனமடைந்தான்; அதைக்கேட்டு அப்பட்டணத்தார் அனைவரும் துக்கித்தார்கள்.

இது இப்படியிருக்க, அந்தக் காட்டுமனிதன் இருப்பிட போய்ச் சேர்ந்தவுடனே ராஜகுமாரனைத் தோளினின்றும் கீழே இறக்கி, இனி நீ உன் தாய்தகப்பன்மாரை ஒருபோதும் பார்க் மாட்டாய். ஆயினும் நீ என்னைச் சிறையினின்றும் விடுவித் யாதலால் எனக்கு உன்னிடத்தில் அதிக அன்பு உண்டாகின்ற நான் உன்னை என்னோடுகூடவே வைத்துக்கொண்டு காப்பாற் கிறேன். நான் சொல்வதையெல்லாம் நீ தள்ளாமல் செய்துகொ டுவருவாயானால், உனக்கு ஒரு குறைவுமுண்டாகாது; இவ்விட திலுள்ள செல்வமும் சம்பத்தும் உலகத்தில் எவர்க்குமில்லை. வெகு சௌக்கியமாக வாழலாமென்று சொல்லி அன்றிரவில் சிறுவனை அங்கு ஓர் இடத்திலே படுத்திருக்கச்செய்தான். ம நாள் காலையில் அந்த இருப்புமனிதன் ராஜகுமாரனைத் தன் கு தண்டை அழைத்துக்கொண்டுபோய், இதோ இந்தப் பொன்த கத்துத் தண்ணீர் எவ்வளவு தெளிவாயிருக்கின்றது பார்த்தை நீ இந்தக் குளக்கரையில் உட்கார்ந்து இதனுள் ஒன்றும் விழா காவல்காத்துவரவேண்டும். ஏதாவது ஒன்று விழுந்தால் இ ளம் சீர்குலைந்துபோம். சொன்னபடி நீ சரியாக நடந்தாயா லையாவென்று பார்க்க நான் நித்தமும் மாலைவேளையில் இவ்வி துக்கு வருவேன் என்று சொல்லிவிட்டுப்போயினான். அப்படி அச்சிறுவன் அதன் கரையில் உட்கார்ந்து காத்துக்கொண்டிருந்தா காத்துக்கொண்டேயிருக்கையில் அவன் விரலில் பொறுக்கக்கூட எரிச்சல் ஒன்று உண்டாயிற்று. அதுகண்டு அச்சிறுவன் இந் தண்ணீரில் நனைத்தால் ஒருவேளை எரிச்சல் அடங்குமோ என் வோவென்று விரலை அந்தக் குளத்தில் தோய்த்தான். உட அவன் அதினின்றும் விரலை எடுத்துவிட்டானென்றாலும், ஐயோ! அந்த விரலெல்லாம் பொன்னாய்ப்போயிருந்தது. எரிச்சலோ எரிச்சலாம் அவன் அந்த விரலைத் தன்னால் இயன்றமட்டும் தே துப்பார்த்தான்; எவ்வளவு நேரம் தேய்த்தும் அந்தப் பொன் போ வில்லை. பொழுதுபோனவுடனே இருப்புமனிதன் திரும்பிவ அந்தச் சிறுவனைப்பார்த்து, குழந்தாய்! என் குளத்தில் என் விசேஷம் நடந்ததென்று கேட்டான். சிறுவன் அந்த விர மறைத்துக்கொண்டு, ஒன்றுமில்லை, ஒன்றுமில்லையென்றான். இ சிறுவன் சூது அவனுக்குத் தெரியாமற்போகவில்லை; நீ உன் வி இக்குளத்தில் நனைத்திருக்கிறாய், முதல்தரமாகையால் இந்தத் த வை நான் இக்குற்றத்தை மன்னித்தேன்; இனிமேலும் இப்ப செய்யப்போகிறாய்? ஜாக்கிரதையென்று சொல்லிவிட்டுப்போயினா

மறுநாளும் அச்சிறுவன் அப்படியே காலையிலெழுந்து காவ காக்கத் துவக்கினான். ஆயினும் அன்றையதினமும் சிறிதுநே கழித்து முன்போலவே விரலொன்று எரிச்சலெடுத்தது. அ அவன் தலைமேல் வைத்து அமுக்கிக்கொண்டிருக்கையில் தற்செ